விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 337 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை (21.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## போதை ஒழிப்பிலிருந்து அரசாங்கம் விலகாது

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(தங்காலை)

போதைப்பொருள் ஒழிப்புப் பணியிலிருந்து அரசாங்கம் ஒரு போதும் விலகாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அநுர அரசாங்கத்துக்கு எதிராக நுகேகொடையில் இன்று பேரணி

### – பல கட்சிகள் ஆதரவு வழங்க மறுப்பு –

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக சில எதிர்க் கட்சிகள் இணைந்து முன்னெடுக்கவுள்ள பேரணி இன்று

02ஆம் பக்கம் பார்க்க

## இலஞ்சம் பெற முயன்ற பொலிஸ் சார்ஜன்ட் கைது

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் சார்ஜன்ட் தர

16ஆம் பக்கம் பார்க்க

### க.பொ.த உ/த விடைத்தாள் அனுப்பாமை

## மாணவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரி பரீட்சை மண்டபத்தில் இருந்து க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை அனுப்பாததால் மாணவர்களுக்கு

02ஆம் பக்கம் பார்க்க

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

### தாயகத்திலும் புலத்திலும் நினைவேந்தலுக்கு ஏற்பாடு



மாவீரர் வாரம் இன்று 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் நினைவேந்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (02ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.ஆறுகால்மடத்தில்

## கைகழுவச் சென்றவர் கிணற்றில் விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றடியில் கைகழுவச் சென்ற நபர் ஒருவர் கிணற்றுக்குள் தவறிவிழுந்து உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

### இளவாலை உயரப்புலத்தில்

## வாந்தி எடுத்த 9 மாத ஆண் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

இளவாலையில் வாந்தி எடுத்த 9 மாத ஆண் குழந்தை ஒன்று

15ஆம் பக்கம் பார்க்க

### அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின்

## இரு பிள்ளைகளையும் பராமரித்த பேர்த்தியார் கிளிநொச்சியில் மரணம்

(கிளிநொச்சி)

தமிழ் அரசியல் கைதியாக 17 ஆண்டுகள் சிறையில் இருக்கும் ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளைப் பராமரித்து வந்த பேர்த்தியார் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் காலமானார்.

ஆனந்தசுதாகரனின் மனைவி 2018ஆம் ஆண்டு கணவரின் பிரிவால் நோயுற்ற நிலையில் மரணமானார்.

இதனால் அநாதரவாக நிர்க்கதியாக நின்ற பிள்ளைகளை வயதான காலத்திலும் பராமரித்து வந்த பேர்த்தியாரான கமலா அம்மா

15ஆம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு பிரதேச சபையில் மாவீரர்களுக்கு அஞ்சலி



15ஆம் பக்கம் பார்க்க

### போதைப்பொருளைக் கடத்துவதற்காக

## படகில் இந்தியா சென்று வந்த இருவர் குருநகரில் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளுக்காக சட்டவிரோதமான முறையில் படகில் இந்தியா சென்று வந்த இருவர் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் - குருநகர்ப் பகுதியில் வைத்து யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான இருவரும் படகில் இந்தியா சென்று

15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் வாடகைக்கு அறை எடுத்து

## போதைப் பாவனை, விற்பனையில் ஈடுபட்ட 8 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வாடகைக்கு அறை எடுத்து, போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டதுடன், விற்பனை நடவடிக்கையிலும் ஈடுபட்டு வந்த குற்றச்சாட்டில் எட்டுப் பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் புறநகர்ப் பகுதியைச் சேர்ந்த இருவர் நீண்டகாலமாகப் போதைப் பொருளுக்கு அடிமையாகியிருந்தனர்.

போதைப்பொருள் பாவனை காரணமாக வீட்டில் உள்ள

02ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று நிலைக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு...

எவ்விதப் பாதிப்பும் இல்லை. அவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என கல்வி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெல்லியடியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பாடத்தின் முதலாம் பகுதி விடைத்தாள்கள் அதிகாரிகளின் கவனக் குறைவால் திருத்தல் பணிக்காக அனுப்பி வைக்கப்படவில்லை.

பின்னர் இரண்டாம் பகுதி விடைத் தாள்களைப் பெற்று, அவற்றினையும் ஒன்றாகச் சேர்ந்துக் கட்டிய பின்னர் முதலாம் பகுதி மற்றும் இரண்டாம் பகுதி விடைத்தாள்களை திருத்தல் பணிக்காக அனுப்ப வேண்டிய வேளை, முதலாம் பகுதி விடைத்தாள்களை மறந்து, இரண்டாம் பகுதி விடைத்தாள்களை மாத்திரம் திருத்தல் பணிக்காக கையளித்துள்ளனர்.

மூன்று நாட்களின் பின்னர், பரீட்சை மண்டபத்தில் காணப்பட்ட, காகித கட்டுக்களை மீள அடுக்கிய போதே, அதற்குள் உயிரியல் பாட விடைத்தாள்கள் காணப்பட்டமையைக் கண்டுள்ளனர்.

இது தொடர்பில் பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டு குறித்த விடைத்தாள்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது தொடர்பில் கல்வி உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் மாணவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை விசாரணை நடைபெற்ற பின் மாணவர்களுக்கு சாதகமான நிலை ஏற்படுத்தப்படும் என்றார். (ம-7)

## அநுர ...

வெள்ளிக்கிழமை நுகேகொடையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணியில் பெருந்திரளான மக்கள் பங்கேற்பார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில், நாட்டில் பல பகுதிகளில் உள்ளவர்கள் நுகேகொடைக்கு அழைத்துவரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அத்துடன் அரசின் ஜனநாயக விரோதச் செயல், அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை இடம்பெறும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து "மாபெரும் மக்கள் குரல்" என்ற தொனிப் பொருளின் கீழ் அரசுக்கு எதிராகப் பேரணியை நடத்தினாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்கவில்லை.

பாராளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என அறிவித்துள்ளது.

மலையகத்திலுள்ள பிரதான இரு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இந்தப் பேரணியில் பங்கேற்பதில்லை என அறிவித்துள்ளன.

விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, திலீத் ஜயவீர உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்களும் இந்தப் பேரணியில் பங்கேற்கமாட்டார்கள். ரணில் விக்கிரமசிங்கவும் இந்தியா செல்லவுள்ள தால் இப் பேரணியில் பங்கேற்க மாட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகளும் அவற்றுக்குச் சார்பான அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கங்கள் மாத்திரமே இதில் பங்கேற்கவுள்ளன.(ம-7)

## போதை...

வர்களுடன் முரண்பட்டு வீட்டை விட்டு வெளியேறி நகர் பகுதியில் வாடகைக்கு அறை ஒன்றினை பெற்று தங்கியுள்ளனர்.

அறையில் தங்கியிருந்து போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டுள்ளனர். பின்னர் தமது வருமானத்திற்காகவும் மேலும் போதைப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காகவும் போதைப்பொருள் வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பிலான தகவல்களை அறிந்த மாவட்ட போதைத்தடுப்பு பிரிவினர், வாடகைக்கு அறை எடுத்து தங்கி இருந்து போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து போதைப்பொருளை மீட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவர்களின் போதைப்பொருள் வலையமைப்பை சேர்ந்த மேலும் 06 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்தும் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 08 பேரையும் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## மாவீரர்...


1982 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளியான லெப்.கேணல் சங்கர் முதல் வித்தாக வீரமரணமடைந்தார்.

அந்த நாளையே மாவீரர் நாளாக 1989 ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் அறிவிக்கப்பட்டது. அன்றிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இந்நாளில் தாயகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் மாவீரர்நாள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

மாவீரர் நாளை நினைவுகூரும் வகையில், நவம்பர் 21 ஆம் நாள் மாவீரர் வாரம் ஆரம்பமாகும். இந்நாட்களில் தமிழ் மக்களால் வணக்க நிகழ்வுகள் மேற்கொள்ளப்படும்.

தாயகத்தில் மாவீரர் நிகழ்வுகளில் தமிழ் மண்ணுக்காய் மரணித்த மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி ஈகைச் சுடர் ஏற்றப்படும் அதற்கு நிகராக புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தல்கள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி




எமது சக ஆசிரியர்
**திரு.க.விஷ்ணுகாந்தன்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் மங்கையற்கரசி கந்தையா**

அவர்கள் 19.11.2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**

(1721)

# நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.

மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(5981)

# கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி கீதா பிரதீஸ்**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் முருகேசு செல்வராணி**


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(1722)

**பாடசாலை சமூகம்**
**யா/கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை**

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 21 - 11 - 1985 | 20 - 11 - 2025 |



## சின்னத்துரை ராஜ்வதனன் [அஜந்தன்]

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை வைரவர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ராஜ்வதனன் (அஜந்தன்) அவர்கள் நேற்று 20.11.2025 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் தயாளினி, மகிந்தன், கிருபாகரன், பிரதீப்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அட்ஷயா, சாய்சரன், அஷ்மிகா ஆகியோரின் மாமனும் குயிலன் அவர்களின் பெரியப்பாவும் ஜெயஜீவன், பிரியா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.11.2025 வெள்ளிக்கிழமை அன்னாரது வீட்டில் இடம்பெற்று பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-4381)

# பொது அறிவித்தல்

புலோலி முச்சக்கரவண்டி சேவையாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினை தெரிவு செய்தல் தொடர்பான கூட்டம் பருத்தித்துறை பிரதேசசபை தவிசாளர் தலைமையில் 2025.11.29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு புலோலி பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் புலோலி உப அலுவலக எல்லைக்குள் முச்சக்கரவண்டியை வாழ்வாதாரத்துக்காக சேவையில் ஈடுபடுத்தி சீவனோபாயத்தை நடாத்தும் முச்சக்கரவண்டி சாரதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.


**குறிப்பு :** வருகை தருவோர் முச்சக்கரவண்டி சாரதியாக கடமையாற்றுவதற்கான கிராமசேவகரது உறுதிப்படுத்தல் கடிதத்தையும் கொண்டுவருதல் வேண்டும்.

**உதயகுமார் யுகதீஸ்,**
தவிசாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை.

(C-4377) **2025.11.21**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முயற்சிகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க பிரித்தானியா உறுதி



(லண்டன்)

**இலங்கையில் உள்ள அனைத்து மத சமூகங்களின், மத சுதந்திரம் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தனது தொடர்ச்சியான ஆதரவைப் பிரித்தானியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

பிரித்தானிய பாராளுமன்ற பிரதி செயலாளர் சீமா மல்ஹோத்ரா, பிரித்தானிய பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத சுதந்திரம் தொடர்பில், அனைத்து இலங்கையர்களும் தங்கள் நம்பிக்கையைப் பாகுபாடின்றி கடைப்பிடிப்பதற்கான உரிமைகளைப் பாதுகாப்பது குறித்து பிரித்தானியா தொடர்ந்து கவலைகளை எழுப்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம், அரசாங்க அதிகாரிகள், மதத் தலைவர்கள், சிறுபான்மை சமூகங்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடன் தொடர்ந்து செயற்பட்டு வருவதுடன், மதங்களுக்கு இடையேயான கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தோ-பசுபிக் பகுதிக்கான முன்னாள் பிரித்தானிய அமைச்சர், கடந்த ஜனவரி மாதம், இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட போது, மதத் தலைவர்கள் உள்ளிட்டவர்களைச் சந்தித்ததுடன், மதச் சுதந்திரத்தின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, பிரித்தானியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் எடுத்துரைத்தார்.

இதேவேளை அண்மையில், இந்தோ-பசுபிக் பகுதிக்கான தற்போதைய அமைச்சர், கடந்த ஒக்டோபர் மாதம் இலங்கையின் சபாநாயகர், நீதி அமைச்சர் மற்றும் ஏனைய மூத்த அதிகாரிகளைச் சந்தித்தார்.

அதன்போது மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான முக்கியத்துவம் தொடர்பில் விவாதங்களை நடத்தினார் என்றும் மல்ஹோத்ரா கூறியுள்ளார். (நி)

## பாடசாலை மாணவர்களிடையே அதிகரிக்கும் புகைப்பழக்கம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களிடையே புகைபிடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலையின் சுவாச நோய் நிபுணர் வைத்தியர் துமிந்த யசரத்ன தெரிவித்துள்ளார்.

14 அல்லது 15 வயதிற்குள், பல பாடசாலை மாணவர்கள் சிகரெட்டை பாவிக்கத் தொடங்குகிறார்கள்.

இவ்வாறு புகைபிடிப்பது நுரையீரல் தொடர்பான நோய்களின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் கூறினார். (நி)

## 150 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு!

(கொழும்பு)

அரச மருத்துவமனைகளில் சுமார் 150 மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவற்றுள் நுண்ணுயிர் கொல்லி, மயக்க மருந்து, சுவாச நோய்க்கான மருந்து, தொற்றாநோய்க்கான மருந்து, வலி நிவாரணி மற்றும் கண் நோய்களுக்கான மருந்து ஆகிய மருந்து வகைகளும் அடங்குவதாக, சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கு சிகிச்சை சேவைகளை தொடர்ச்சியாக வழங்கத் தரமான மருந்து வகைகளைத் தொடர்ச்சியாக விநியோகிப்பது அவசியமாகும். இதன்படி, மருந்துகள், சத்திரசிகிச்சை உபகரணங்கள், இரசாயன பரிசோதனைகளுக்கு அவசியமான உபகரணங்கள், கதிரியல் பரிசோதனைக்கான உபகரணங்கள் ஆகியவற்றை உரிய நேரத்தில் பெற்றுத்தருவது அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சின் பொறுப்பாகும் என்றும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும், தற்போது மருத்துவமனைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான பற்றாக்குறை தீவிரமடைந்துள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

## பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 8 பேரின் உறுப்புரிமை இடைநிறுத்தம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வழிகாட்டுதலுக்கு முரணாகச் சென்று 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் 8 பேரின் கட்சி உறுப்புரிமை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் அறிவிப்புகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு முரணாக இந்த நபர்கள் செயற்பட்டுள்ளதாகவும், எனவே, அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.


வீரசிங்க தர்ஷன விதானகே - பதியலாவ பிரதேச சபை, மொஹொமட் நசீர் மொஹொமட் ரிநோஸ்- கற்பிட்டி பிரதேச சபை, ஏ.ஏ. அனுரகுமார - நாத்தாண்டிய பிரதேச சபை, மாரசிங்க ஆரச்சிகே அமில் எரங்க - நாத்தாண்டிய பிரதேச சபை, ரதுகமகே உமேஷா ரஷ்மி மல்ஷானி - நாத்தாண்டிய பிரதேச சபை, வகலந்தே அதுல குமார வகலத் - பொல்காஹவெல பிரதேச சபை, பாலசூரிய முதியன் சலாகே அனுர குமுர - பொல்காஹவெல பிரதேச சபை, .பி. கே. சுமேத லக்மால் - பெல்மடுல்ல பிரதேச சபை ஆகியோரே தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டள்ளனர். (நி)

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தமிழர்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்

### சிறீதரன் எம்.பி வலியுறுத்தல்

(கொழும்பு)

திருகோணமலையில் புத்தர் சிலை வைக்கப்பட்ட சம்பவத்தில், சஜித் பிரேமதாச கூறிய கருத்தை அவர் மீளப் பெற வேண்டும் என்று பாராமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், அவர் தமிழ் மக்களிடமும் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பாதீடு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, திரு கோணமலையில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை அதே இடத்தில் இருக்கும் வரையில், குறித்த பிரச்சினை தீராது என்று பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## 'குஷ்' போதைப்பொருளுடன் கட்டுநாயக்கவில் மூவர் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 4 கோடி ரூபாய்க்கும் அதிக மதிப்புள்ள குஷ் போதைப் பொருளுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் விமான நிலையத்திலிருந்து வெளியேறும் மூன்று பயணிகளை விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு கைது செய்ததாகக் கூறப்படுகிறது.

சந்தேக நபர்களின் பைகளில் 4 கிலோகிராம் 22 கிராம் குஷ் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள் வாணிபக் கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் மற்றும் சிற்றுண்டிச்சாலை, வாகனப்பாதுகாப்பு நிலையங்கள், வாகனத் தரிப்பிடக் குத்தகை, நடமாடும் கடைகள், தள்ளுவண்டில்கள், விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றுக்கான

## கேள்வி அறிவித்தல் – 2026

## (01.01.2026 – 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | - ரூபா **1,180.00** (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | - 21.11 .2025 08.12.2025 (மு.ப **9.00** - பி.ப.**2.30** மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | - 09.12.2025 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | - 09.12.2025 .மு.ப 10.00 மணிக்கு |

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு **09.12.2025** ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத் தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதிஅற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக் கப்பட்டுள்ளது. அதனை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப் பலகையில் பார்வையிடமுடியும்
8. கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் **1/3** வைப்புப்பணத்தை 15.12.2025 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

### மீள்கேள்வி அறிவித்தல் - 2026 (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை மீன்சந்தை | | 10,000.00 | 11,500,000.00 |
| 2 | குருநகர் மீன்சந்தை | | 10,000.00 | 10,132,022.00 |
| 3 | பெரியகடை மரக்கறிச்சந்தை | | 10000.00 | 2,300,000.00 |
| 4 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 6 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 58,100.00 |
| 7 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 1,801,000.00 |
| 8 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 2,740,000.00 |
| 9 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 1,021,511.00 |
| 10 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 1,200,000.00 |
| 11 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 12 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 13 | செங்குந்த கருவாட்டுக்டை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 14 | செங்குந்த கோழிஇறைசிக்கடை | இல 04 | 5,000.00 | 663,500.00 |
| 15 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 16 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல06 | 5,000.00 | 1,001,150.00 |
| 17 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 18 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 71,100.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 22 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 24 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |
| 25 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 26 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 27 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 551,111.00 |
| 34 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 7,000.00 | 712,210.00 |

### கேள்வி அறிவித்தல் (01.01.2026 - 31.12.2026)

| இல | விபரம் | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|
| 1 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை, துரையப்பா வியைாட்டு அரங்கு நடமாடும் கடை இல 01, சுப்பிரமணியம் பூங்கா- நடமாடும்கடை இல 01, இல 02 | 61,000.00 | 655,000.00 |
| 2 | வாகனத்தரிபிடக் குத்தகை | 40,000.00 | 4,379,460.00 |
| 3 | இந்து விடுதிக்கு தெற்குப்பக்கமாக உள்ள வாகனப் பாதுகாப்பு நிலையமும் நல்லூர் மலசலகூடசுத்திகரிப்பு பணியும் | 5,000.00 | 476,000.00 |
| 4 | நீதிமன்ற துவிச்சகசக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 550,000.00 |
| 5 | நவீன சந்தை விளம்பர ஒலிபரப்பு சேவை | 25,000.00 | 2,597,647.06 |
| 6 | செங்குந்த விளம்பர ஒலிபரப்பு சேவை | 7,000.00 | 500,047.07 |
| 7 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 01 | 20,000.00 | 481,000.00 |
| 8 | நடமாடும் கடை முத்திரச்சந்தை இல 02 | 20,000.00 | 418,999.00 |
| 9 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 01 | 20,000.00 | 212,500.00 |
| 10 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 02 | 20,000.00 | 207,000.00 |
| 11 | நடமாடும் கடை இல 01 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 216,000.00 |
| 12 | நடமாடும் கடை இல 02 - பண்ணை மீன்சந்தை | 20,000.00 | 211,200.00 |
| 13 | நடமாடும் கடை நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையம் இல 03 | 20,000.00 | 180,000.00 |
| | நடமாடும் வியாபாரம் :- நிபந்தனை.<br>1. நடமாடும் வியாபார விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து மாசநகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும்.<br>2. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்யவேண்டும். | | |
| 14 | தள்ளுவண்டில் இல 01 | 20,000.00 | 120,000.00 |
| 15 | தள்ளுவண்டில் இல 02 | 20,000.00 | 120,000.00 |
| 16 | தள்ளுவண்டில் இல 03 | 20,000.00 | 120,000.00 |
| 17 | தள்ளுவண்டில் இல 04 | 20,000.00 | 120,000.00 |
| 18 | தள்ளுவண்டில் இல 05 | 20,000.00 | 120,000.00 |
| 19 | தள்ளுவண்டில் இல 06 | 20,000.00 | 120,000.00 |
| 20 | தள்ளுவண்டில் இல 07 | 20,000.00 | 120,000.00 |
| 21 | பெரியகடைமரக்கறிச்சந்தை வாழைப்பழக்கடைக்கு வடகிழக்கு மூலையாகவும் சந்தையின் வைரவர் கோவிலின் வடமேற்கு மூலையாகவும் உள்ள துவிச்சக்கரவண்டி மோட்டார் சைக்கில் பாதுகாப்பு நிலையம் | 5,000.00 | 250,000.00 |

முதல்வர்,
யாழ்.மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-4378)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டுநர்களுக்கு அபராதப் புள்ளிகள்

# சாரதி அனுமதிப்பத்திரம் இரத்தாகலாம்

## அமைச்சர் பிமல் தெரிவிப்பு



**(கொழும்பு)........................ எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு முதல் ஓட்டுநர்களுக்கு அபராதப் புள்ளிகளை வழங்கும் புதிய முறையொன்றை கொண்டுவர விரும்புவதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வாகன சாரதிகளுக்கு அபராதப் புள்ளிகளை வழங்கிய பிறகு அதிகபட்ச புள்ளிகள் வரம்பை மீறினால் ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது அல்லது இரத்து செய்வது பல நாடுகளில் உள்ள ஒரு நடைமுறையாகும்.

இலங்கையில் இதே போன்ற ஒரு முறையை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போது பல பகுதிகளில் செயற்பட்டு வரும் வாகன அபராதங்களை ஒன்லைனில் செலுத்தும் முறை இந்த ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# அமைச்சர் சுசில் ரணசிங்க மருதங்கேணிக்கு விஜயம்



(கரணவாய்)

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க வடமராட்சி கிழக்கு தாழையடியில் அமைந்துள்ள கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைப் பார்வையிட நேற்றைய தினம் கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

தாழையடி கடல்நீரை நன்னீராக்கும் செயல்முறைகள் மற்றும் பொறியியல் தொகுதி என்பவற்றைப் பார்வையிட்ட அமைச்சர் அங்கு அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார். (8-60)

# அதிகளவான சைபர் குற்றங்கள் வடக்கு மாகாணத்தில் பதிவு

(கொழும்பு)

நாளொன்றுக்கு சைபர் குற்றங்கள் தொடர்பாக சுமார் 25 முறைப்பாடுகள் இலங்கையில் பதிவு செய்யப்படுவதாக பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று 2026 வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவரது கூற்றுப்படி, இவற்றில் பெரும்பாலான முறைப்பாடுகள் வட மாகாணத்தில் பதிவாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



தரவுகளின்படி 2020 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 24 சைபர் குற்றச் சம்பவங்களும், 2021 ஆம் ஆண்டில் 577 சபைர் குற்றச் சம்பவங்களும், 2022 ஆம் ஆண்டில் 654 சைபர் குற்றச் சம்பவங்களும், 2023 ஆம் ஆண்டில் 472 சைபர் குற்றச் சம்பவங்களும், 2024 ஆம் ஆண்டில் 1,539 சைபர் குற்றச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இது தவிர, இந்த ஆண்டின் ஒக்டோபர் 1 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 2,368 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க, நாட்டின் பல மாவட்டங்களில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் கீழ் கணனிக் குற்றப் புலனாய்வு துணைப் பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளன என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். (நி)

# கரைச்சி பிரதேச செயலகத்தில் கலாசாரப் பெருவிழா







(தருமபுரம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் கரைச்சி பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப்பெருவிழா 2025 கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) அஜிதா பிரதீபன் சிறப்பு விருந்தினராகவும், ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகரும் சமய, சமூக, இலக்கிய விற்பன்னர் செல்வராணி சோமசேகரம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் கலை நிகழ்வுகள், கரை எழில் - 9 நூல் வெளியீடு, மற்றும் கலைஞர்களுக்கான கரை எழில் விருது, கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு தொகை என்பன வழங்கப்பட்டன. குறித்த நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மாவட்ட பொது அமைப்பு சார்ந்தோர், கலைஞர்கள், பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# மாத்தறை பகுதியில் வேகமெடுக்கும் சிக்குன்குனியா

## சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(மாத்தறை)

மாத்தறை மாவட்டத்தில் சிக்குன்குனியா நோய் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

டெங்குவின் அதிக ஆபத்துடன் இணைந்து இந்த நோய் பரவல் ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் நிஜித் சுமனசேன தெரிவித்தார்.

இது குறித்து மேலும் பேசிய சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிஜித் சுமனசேன,

இலங்கையில் தற்போது மழை பெய்து வருவதால் இந்த ஆண்டு டெங்கு அதிக ஆபத்தில் உள்ளது. அந்த சூழ்நிலையில், டெங்குவை விட மக்களை மிகவும் துன்பப்படுத்தும் நோய்கள் மாத்தறை பகுதியில் இருந்து பதிவாகி வருகின்றன.

கடந்த காலத்தில், இந்த நோய் நாரஹேன்பிட்டிக்கு அருகிலுள்ள கொழும்பு பகுதியில் இருந்தது, ஆனால் அது கட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நோய் பல மாதங்களாக மாத்தறை பகுதியில் பரவி வருகிறது. மேலும், இந்த சூழ்நிலையில் நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

குறிப்பாக, டெங்கு நுளம்பைப் போன்ற இனமே இந்த சிக்குன்குனியாவின் முக்கிய பரவலுக்கு காரணம் ஆகும்." எனவும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டில் இளைஞர், யுவதிகளை சாதனையாளர்களாக மாற்ற வேண்டும்

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் தர்மகுமாரன்

(யாழ்ப்பாணம்)

**போராடும் குணம் கொண்ட எமது இளைஞர், யுவதிகளை விளையாட்டில் சாதனையாளராக மாற்றவேண்டும் என உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.**

ஆசிய மாஸ்ரர் மெய்வல்லுனர் போட்டியில் வெற்றி பெற்ற ரமணனின் கௌரவிப்பு நிகழ்வு நடேஸ்வராக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சங்ககாலத்தில் இருந்தே தமிழன் வீரத்தை பறை சாற்றினான். அதன் பின் தமிழன் உரிமைக்காக தனது வீரத்தை உலகம் வியக்கும் அளவுக்கு வெளிக்காட்டினான்.

அந்த வம்சத்தில் தளைத்தோங்கும் இளைஞர், யுவதிகளை விளையாட்டில் ஈடுபடுத்தி வீரத்தை வித்தாக்கி சாதனையாளர்களாக மாற்ற வேண்டும்.

இல்லையேல் அவர்கள் சமூகப் பிறழ்வான விடயங்களிலே தமது வீரத்தை வெளிப் படுத்துவர். அது எமது தேசத்தை சிதைத்து விடும்.

இதனைப் புரிந்து எல்லோரும் ஒற்றுமையாக செயலாற்ற முன்வர வேண்டும். பிறந்த குழந்தைகூட அழுகை என்னும் போராட்டத்தின் மூலமே தாயிடம் பாலைப்பெற்றுக் கொள்கிறது.

எனவே பாராட்டுகளும் ஊக்குவிப்புக்களும் புதிய உத்வேகத்துடன் செயற்படத்தூண்டும். காலம் அறிந்து செய்யும் பாராட்டுக்கள் ஞாலத்தில் உயர்ந்தவர்களாக மாற்றும் அதனால் சமூகம் நன்மை பெறும்.

தேசிய தலைவன் கூறியது போல யார்பேசுகிறார்கள் என்பது முக்கியமல்ல பேசுகின்றவரின் பேச்சு தேசியத்துக்கு வலுச்சேர்த்தால் அவனும் தேசியத்தின் பங்காளியே. அதே போல விளையாட்டுப் பற்றிய சிந்தனை உள்ள அனைவரும் விளையாட்டு அபிவிருத்தியின் பங்காளிகளே எனத் தெரிவித்தார். (8)

# எதிர்வரும் நாட்களில் மின்னல் தாக்கம் ஏற்படலாம் அவதானத்துடன் செயற்படுங்கள்

## அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாட்களில் மின்னல் தாக்கம் ஏற்படலாம் என பொது மக்களை அவதானத்துடன் இருக்குமாறு யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 218 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தோடு ஒரு வீடு முழுமையாகவும் 6 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மேலும் வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்கள், மதகுகளைத் தடை செய்ய வேண்டாம் என கோருகிறோம். அத்துடன், எதிர்வரும் நாட்களில் பகல் வேளைகளில் மின்னல் தாக்கம் ஏற்படக் கூடிய சாத்தியங்கள் காணப் படுவதனால் பொதுமக்கள் அது தொடர்பிலான முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்தார். (8-33)

# 'கார்த்திகை வாசம்' மலர்க் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் "கார்த்திகை வாசம்" என்ற பெயரில் மலர்ச் செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் "மலர் முற்றம்" என்ற காட்சித் திடலை கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைத்துள்ளது. வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம் மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் காட்சிக்கூடங்களை அமைத்துள்ளனர். கூடவே இயற்கை உரங்கள், இயற்கை கிருமிநாசினிகள், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட பழங்கள் ஆகியனவற்றை விற்பனை செய்யும் காட்சிக்கூடங்களும் அமைந்துள்ளன.

இம் மலர்க்கண்காட்சியைப் பார்வையாளர்கள் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் காலை 8.30 மணிமுதல் முன்னிரவு 7 மணிவரை பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# வடக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)



வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக ஜி.எம்.எச். புத்திக்க சிறிவர்தன நேற்றைய தினம் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

காங்கேசன்துறையில் உள்ள வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் காரியாலயத்தில் நடைபெற்ற சர்வமத வழிபாடுகளுடன் ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருந்த திலக் தனபால வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில் புதிய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பொலிஸ் உயர் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன இதற்கு முன்னர் பொலிஸ் தலைமையகம் மற்றும் வட மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவிகளில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# சிதம்பரத்தில் புண்ணிய நாச்சி அம்மையார் மடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபையின் பரிபாலனத்தின் கீழ். இல.28, மாலை கட்டித்தெரு, சிதம்பரத்தில் புண்ணிய நாச்சி அம்மையார் மடத்தில் வெளிநாடுகளிலும் இலங்கையிலும் வாழும் சைவ அன்பர்கள் தலயாத்திரை செய்யும்பொழுது மடத்தில் தங்குவதற்கு வசதிகள் உள்ளது. தாங்கள் தங்குவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளுவதற்கு சபையின் வட்ஸ்சப் இலக்கம் 077 789 5716 அல்லது 021 222 7678 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு சைவ பரிபாலன சபை செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 150 | 150 | 160 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 220 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 200 | 250 |
| தக்காளி | 200 | 200 | 200 | 300 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 200 | 150 | 200 |
| கோவா | 180 | 180 | 250 | 250 | 200 |
| கரட் | 250 | 250 | 300 | 250 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 | 80 |
| புடோல் | 200 | 300 | 250 | 300 | -- |
| வாழைக்காய் | 50 | 70 | 100 | 150 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-300 | 300 | 350 | 220 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 200 | 200 | 180 |
| பாகற்காய் | 800 | 700 | 1000 | 1600 | 600 |
| வெண்டக்காய் | 150 | 250 | 200 | 300 | 150 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 300 | 300 | -- |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 | 400 | 350 |
| லீக்ஸ் | 250 | 220 | 250 | 250 | 160 |
| பீற்றூட் | 300 | 200 | 300 | 250 | 150 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 800 | 650 |
| முருங்கைக்காய் | 600 | 850 | 1000 | 800 | 600 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | 150 | 100 | -- |
| கீரை – 1 பிடி | 120 | 70-100 | 150 | 150 | -- |
| தேசிக்காய் | 1500 | 1600 | 600 | 600 | -- |
| தேங்காய் (ஒன்று) | 120 | 200 | 150 | 150-200 | -- |
| இராசவள்ளி | 400 | 600 | 600 | 800 | -- |
| வெங்காயப்பூ | 400 | -- | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 180 | 200 | 300 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 150 | 60 | -- |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | -- |
| [illegible] | 150 | 100-150 | 100 | 200 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் உள்ள 82 1/2 கியூப் மணல் மற்றும் ஏனைய பொருட்களான சவல், மண்வெட்டி, சுத்தியல், அலுமினியப் பானை, அலுமினியச் சட்டி, பிளாஸ்ரிக் சோடா கேஸ், சில்வர் கோப் பைகள், அலுமினியப் பானை, பெரிய தாச்சிச் சட்டி, 4 அடி இரும்புப் பைப், 3 அடி இரும்புக் கம்பிகள், 1 அடி இரும்புக் கம்பி, 1 1/2 அடி இரும்புக் கம்பி, சைக்கிளின் உடைந்த இரும்புப் பாகங்கள், சைக்களின் சொக்கற்சோவரின் உடைந்த இரும்புக் கம்பி, (1 குடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது), 1 1/2 ஓ 1 1/2 அளவுடைய "ட" வடிவப் பட்டம், செப்புச் சுருள்கள், வாள் பட்டம், தராசு முள், அரம், மூலை மட்டம், 5 அடி அலுமினிய கேட்டின் பட்டம், அலுமினிய ரியூப்லைட் கவர், 20 லீற்றர் அலுமினிய பால் கான், இரும்பு ஆப்பினது உடைந்த சிறிய பாகங்கள், பச்சைப் பிடியுடன் கூடிய சிறிய ஸ்குறூட்ட்ரைவர், இரும்பு வாளி நெளிவடைந்த நிலையில், இரும்புச் சாவி என்பன நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஏலத்தில் விற்கப்படவுள்ளது. எனவே குறித்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள இருப்பவர்கள் அன்றைய தினம் அரை மணித்தியாலத்திற்கு முன்பு விற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம்,

பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணத்துடன் சமூகமளிக்க வேண்டும்.

ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை நீதிபதிக்கு மட்டுமே உண்டு.

கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப பணத்தினை உடனடியாகச் செலுத்தி பொருட்களினைப் பெற்றுக் கொள்ள முடியும். காசோலை மூலமான கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மணலினை புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து வழித்தட அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று எதிர் வரும் 25.11.2025 மற்றும் 26.11 2025 ஆம் திகதிகளில் நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும்.

ஏலவிற்னையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய பொருட்களை அன்றைய தினமே நீதிமன்ற வளாகத்தை விட்டு எடுத்துச் செல்ல வேண்டும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

# தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானி போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மரநடுகை மாதத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் நடத்தி வரும் தாவராவதானிப் போட்டி இம்முறையும் நடைபெறவுள்ளது.

இயற்கை எனது நண்பன் என்று இயற்கையை நேசித்த தமிழர் வாழ்வியல் இன்று இயற்கையில் இருந்து தூரவிலகிச் சென்று கொண்டிருக்கிறது.

இதுவே இன்றைய சூழற் பிரச்சினைகளுக்கெல்லாம் தலையாய காரணம். இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இயற்கையை நேசிக்கக் கற்றுக் கொடுக்கும் வகையில் தாவரங்களை அடையாளம் காணும் தாவராவதானிப் போட்டியை நடாத்தி வருகிறது.

இந்த ஆண்டுக்கான இப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் ஆலயத்திற்கு அருகாமையில்) நடைபெறவுள்ளது.

தாவராவதானி போட்டியில் மாணவர்கள் மாத்திரம் அல்லாது பால், வயது வேறுபாடின்றி எவரும் முன் பதிவு இல்லாமல் கலந்து கொள்ளமுடியும்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு தாவராவதானி சான்றிதழோடு பரிசுகளும் வழங்கப்படும் எனவும், மேலதிக விபரங்கள் தேவைப்படின் 077 556 5460 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் எனவும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தெரிவித்துள்ளது. (8)

# ஜப்பான் தூதரக ஆலோசகர் - மெசிடோ பணிப்பாளர் சந்திப்பு

(மன்னார்)

ஜப்பான் தூதரகத்தின் அபிவிருத்தி, பொருளாதார மேம்பாட்டுக்கான ஆலோசகர் சுகுமி டொயோட்டா கடந்த புதன்கிழமை மன்னாரிற்கு விஜயம் செய்த நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது ஜப்பான் தூதரகத்தின் அபிவிருத்தி பொருளாதார மேம்பாட்டுக்கான ஆலோசகர் சுகுமி டொயோட்டா மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது சிவில் சமூகங்களுடன் வேலைத்திட்டத்தை மேற் கொண்டு வரும் குறித்த நிறுவனத்தின் செயற்பாடுகள், மன்னார் மாவட்ட மக்கள், விவசாயிகள் எதிர்நோக்கும் சவால்கள், குறித்தும் மாவட்டத்தில் உள்ள பெண்கள், சிறுவர்களின் அபிவிருத்தி செயற்பாடுகள், மாவட்டத்தின் கல்வி விடயங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

மேலும் சிவில் சமூகம் நாட்டில் இடம் பெற்ற யுத்தத்தின் பின்னர் வட கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றமையையும் சுட்டிக்காட்டினர். (8-285)




# சிவன் சேவடி போற்றி நல்வாழ்வு வாழ்வோம்

**அஞ்சருளைப் போற்றி ஐந்து புலனைத் துறக்க**
**நெஞ்சே உனக்கு நினைவு நான் சொல்கிறேன்;**
**வஞ்சகத்தை நீக்கி மறு நினைவு வாராமல்**
**செஞ்சரணத்தானைச் சிந்தை செய்வாய் நெஞ்சமே!**

பட்டினத்தார் பாடல் - நெஞ்சோடு புலம்பல் (11)

**நமசிவாய** அருளைப்போற்றி, ஐந்து புலனைத் துறந்து நீக்க எம் நெஞ்சுக்கு பட்டினத்தார் சொல்லுகிறார் **வஞ்சகங்களான எண்ணங்களை நீக்கி வேறு பிழையான நினைவு வாராது நிறுத்தி அன்பே சிவம் ஆகிய செஞ்சரணத்தை பற்றி போற்றி வாழ்வோம்.** காலை மாலை **சிவ சிவ** என இறைவனைத் தியானித்து இருந்து உள்ளத்தில் இறைவன் சிவனைத் தரிசிப்போம். பட்டினத்தாரது வாக்குக்கு அமைவாக மாணிக்கவாசகர் சுவாமியைப் **பதிகத்தில் ஏசுறவு என்பது வருந்தி அழைத்தல்,** நாம் ஆலயத்திலும், நமது இல்லங்களிலும் **காலை, மாலை பிள்ளைகளுடன் இறைவனது பெருங் கருணைத் திறத்தினை எண்ணியெண்ணிப் பாடி,** மனம் நைந்து உருகி **ஏகதேச ஞானத்தை உணர்வதால்** நாம் இங்கு சைவநெறி மூலம் அருள் செய்த திருவாசகசத்தேன் பாட்டு எண் 10 ஆவது.

**நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்**
**தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**
**தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் அருள்செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே**

உலகிலே தேன் போன்று, இனிய அமுதம் சிவபெருமான். **அப்பெருமான் தானே எழுந்தருளி வைத்து எம் மனத்துள் புகுந்தான். சைவ மக்கள் பெற்ற ஓர் பாக்கியம்.** எமக்கு ஊனோடு கூடிய உயிர் வாழ்க்கையை வைத்து நீக்கும்படி அருள் செய்தவன் அதனால் அனைவரும் **"சிவாயநம"** என சொல்லப் **பெற்றேன்.**

இப் பேற்றைப் பெறுவதற்கு முற்பிறவியில் நானே நற்றவம் செய்தேன்? அருள் செய்தான்! இறைவன்

நமசிவாய என்பது தூல பஞ்சாட்சரம்-போககம்-வாழ்கையில் அருளுவது. சிவாய நம எனபது சூட்சும பஞ்சாட்சரம் வீடு அளிப்பது முத்தி. நாம் ஓம் நமசிவாய என வாய்விட்டு ஓதியும், ஓம் சிவாய நம என மனதில் சிந்தித்து சகல நலன்களையும் பெற்று வாழ்வோம்.

திருமுறைச் சில வேள்விப் பெருவிழா பன்னிரு திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ் முற்றோதல் 21.11.2025 தொடர்ந்து 04.12.2025 வரையும் 14 நாட்கள் இடைவிடாது ஓதப்படும். இடம் வைரவர் காளி அம்பாள் தேவஸ்தானம் சங்குவேலி-மானிப்பாய்.

சைவ அடியார்கள் திருமுறைச் சிவவேள்வியும் கலந்து பங்கேற்றுத் தங்களது சகல வேண்டுதலும் திருவருள் அன்புடன் நிறைவேற்றுவான்.

**அறிவித்தல்**


சைவ சமய பாதுகாப்புப் பேரவையும் ஆலய நிர்வாகத்தினரும்.

சித்தர் சிவவாக்கியம் - 433 தவர் இருந்து ஓதுவாம்.

**உண்மையான தொன்றை உற்று நோக்கி உம்முனே**
**வன்மையான வாசியுண்டு வாழ்த்தி ஏத்த வல்லிரேல்**
**தண்மை பெற்று இருக்கலாம் தவமும் வந்து நேரிடும்**
**கன்மதனம் ஆகும் ஈசர் காட்சிதானுங் காணுமே**

சிவபெருமானை ஈடு இணையற்ற முழுமுதற்பெருங் கடவுளாகப் போற்றி வழிபடுவது சைவ மரபு. திருமுறைகளை பக்திச் சுவையுடன் நாளும் காலை, மாலை நமது பிள்ளைகளுடன் ஓதி உய்வுபெற வேண்டுவது ஒவ்வொருவரது கடமையாகும்.

ஆலயங்களிலும் இல்லங்களிலும் உள்ளங்களிலும் இவற்றை ஒலிக்குமாறு செய்வது சிறந்ததொரு சிவப்பணியாகும்.



**க.கு.கு சிவபாலன் K.K.K**
**சிவநெறிப்புரவலர், பாஞ்சசன்யம்**

(C-4375)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# போரை முடிவுக்கு கொண்டு

# உக்ரைனுக்கு விஜயம் செ

# அமெரிக்க இராணுவ அதிகா

(கீவ்) ••••••••••••••••••••••

**ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் குறித்து விவாதிக்க பென்டகனின் மூத்த அதிகாரிகள் உக்ரைனுக்கு பயணித்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.**




அமெரிக்க இராணுவச் செயலாளர் டான் டிரிஸ் கோல் தலைமையிலான இந்தக் குழு, துருக்கியப் பயணத்திலிருந்து திரும்பும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை இன்று கியேவில் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் அமெரிக்காவும் ரஷ்யாவும் உக்ரைனிடமிருந்து பெரும் சலுகைகளைக் கொண்ட ஒரு புதிய அமைதித் திட்டத்தைத் தயாரித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகத் தொடங்கின.

வோஷிங்டனோ அல்லது மொஸ்கோவோ இந்தத் திட்டத்தை அதிகாரப்பூர்வமாக இன்னும் உறுதிப்படுத்தவில்லை.


முன்னதாக, உக்ரைனின் மேற்கு நகரமான டெர்னோபில் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டதாக அங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

2022 ஆம் ஆண்டில் ரஷ்யா உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியது.

இந்த நிலையில், உக்ரைனிய அதிகாரிகளைச் சந்தித்து போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் குறித்து விவாதிக்க அமெரிக்க நிர்வாகத்தின் சார்ப செயலாளர் டிரிஸ்கோலு அவரது குழுவினரு நேற்று கீவ் வந்தன என்று இராணுவ செய்த தொடர்பாளர் கர்ன டேவிட் பட்லர் ஒரு அற கையில் தெரிவித்தார்.

ஜனவரி மாத

## ஜப்பான் துறைமுகத்தில் திடீர் தீ 170 கட்டடங்கள் எரிந்து நாசம்



(டோக்கியோ)

ஜப்பானின் தெற்கு கடலோர நகரமான ஒய்டாவில் உள்ள சாகனோசெக்கி பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திடீரென தீ பரவியதில் 170இற்கும் மேற்பட்ட கட்டடங்கள், வீடுகள், கடைகள் தீயில் எரிந்து பெருமளவு சேதங்களை எதிர்கொண்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்திருக்கலாம் என தீயில் எரிந்த வீடொன்றிலிருந்து மனித உடல் எச்சங்களை கண்டுபிடித்த அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானின் தென் மேற்கு ஒய்டா மாகாணத்தில் சகனோஸ்கி நகரம் உள்ளது.

கடற்கரை நகரமான சாகனோசெக்கியிலிருந்து பிடிக்கப்படும் சாளை வகை மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இதற்காக துறைமுகம் அமைத்தும், மீன்களை உறைய வைக்க, பதப்படுத்த கிடங்குகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இந்த துறைமுகத்தில் நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

மளமளவென பற்றி எரிந்த தீ, மற்றக் கட்டடங்களுக்கும் வேகமாகப் பரவி அருகே உள்ள மீனவர்களின் வீடுகளுக்கும் பரவியது.

இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் வாகனங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களில் வந்து தீயை அணைக்க போராடினர்.

நீண்ட நேரத்திற்கு பிறகு துறைமுகத்தில் பரவிய தீ அணைக்கப்பட்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

## ...வர ...ய்யும் ...ரிகள்




...ர்யாக ...காலும் ...னரும் ...ந்தனர் ...செய்தித் ...ர்னல் ... அறிக் ...ர். ...மாதம்

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து உக்ரைன் தலைநகரில் பேச்சுவார்த்தை நடத்திய மிக மூத்த அமெரிக்க இராணுவ அதிகாரிகள் டிரிஸ்கோலும் ஜெனரல் ஜார்ஜூம் ஆவர். (நி)


...டிது.

இந்தத் தீவிபத்தில் 170 க்கட்டடங்கள் தீயில் எரிந்து நாசமாயின.

இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். (நி)



## ஜப்பான் கடல் உணவுகளுக்கு சீனாவில் தடை......



(பீஜிங்)

சீனாவின் மிகப்பெரிய உணவு ஆதாரமாக ஜப்பான் நாட்டின் கடல் உணவுகள் உள்ளன.

இருநாடுகளிடையே ஆண்டுக்கு பல ஆயிரம் கோடிக்கு கடல் உணவுகள் ஜப்பானில் இருந்து சீனாவிற்கு இறக்குமதியாகிறது.

தாய்வானை தங்களுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியெனக் கூறி போர் விமானங்களைப் பறக்கவிட்டும், போர்க் கப்பல்களை களம் இறக்கி சீனா அச்சுறுத்தி வருகிறது.

ஜப்பான் பிரதமர் சனே தகைச்சி, தாய்வானை சீண்டினால் சீனாவுக்குத் தக்க பதிலடி கொடுக்கப்படும் என எச்சரித்தார்.

இதனால் வெகுண்டெழுந்த சீனா, ஜப்பானின் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்தது.

மேலும் அந்த நாட்டிற்கு தங்களுடைய மக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தியது.

சீனாவின் மிகப்பெரிய உணவு ஆதாரமாக ஜப்பான் நாட்டின் கடல் உணவுகள் உள்ளன. மீன்கள், இறால்கள், கடல் நண்டுகள், ஸ்குவிட்கள் ஆக்டோபஸ்கள் போன்றவை அங்கிருந்து அதிகளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இருநாடுகளிடையே ஆண்டுக்கு பல ஆயிரம் கோடிக்கு கடல் உணவுகள் ஜப்பானில் இருந்து சீனாவில் இறக்குமதியாகிறது.

இந்தநிலையில் ஜப்பான் கடல் உணவுகளுக்கு சீன அரசாங்கம் நிரந்தர தடை விதித்தது.

மேலும் அந்த நாட்டின் சினிமாவுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (நி)

## செமேரு எரிமலை வெடித்துச் சிதறியது

(ஜகர்த்தா)


இந்தோனேசியா நாட்டின் ஜாவா தீவில் உள்ள செமேரு எரிமலை நேற்று வெடித்துச் சிதறியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செமேரு எரிமலை வெடித்ததில் கரும்புகையுடன் எரிமலை குழம்பும் வெளியேறி வருவதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்புக் கருதி வெவ்வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாவா தீவின் மிக உயரமான மலையான செமேரு வெடித்ததில் 5.6 கி.மீ உயரத்துக்கு சாம்பல் பரவி மேகங்களுடன் கலந்தது போன்ற காட்சிகள் சி.சி.டிவியில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், செமேரு மலையின் வெடிப்பு அனர்த்தத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் அம்மலை தொடர்பில் உயர்ந்தளவிலான எச்சரிக்கையினை அந்நாட்டின் எரிமலையியல் நிறுவனம் விடுத்துள்ளது.

அத்தோடு, எரிமலை வெடிப்பு அபாயம் காரணமாக உள்ளூர் குடியிருப்பாளர்கள் 2.5 கி.மீ தொலைவில் சென்று பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (நி)



## ஷேக் ஹசீனாவை கைது செய்ய இன்டர்போல் உதவியை நாடும் வங்கதேசம்

(டாக்கா)

மரண தண்டனை விதிக்கப்பட்ட வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வங்கதேச இடைக்கால அரசு, “இன்டர் போல்” எனப்படும் சர்வதேச பொலிஸ் அமைப்பின் உதவியை நாட உள்ளது.

வங்கதேசத்தில் கடந்த ஆண்டு நடைபெற்ற மாணவர் போராட்டத்தில் 1,400இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அப்போதைய பிரதமரும், அவாமி லீக் கட்சி தலைவருமான ஷேக் ஹசீனா, வன்முறையைக் கட்டுப்படுத்த சுட உத்தரவிட்டதே காரணம் என




குற்றம்சாட்டப்பட்டது.

இது தொடர்பான வழக்கில், வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

தீர்ப்புக்குப் பின், தற்போது டில்லியில் உள்ள ஷேக் ஹசீனாவை ஒப்படைக்குமாறு வங்கதேச இடைக்கால அரசு மத்திய அரசிடம் கேட்டது.

இதற்கு மத்திய அரசு நேரடியாக பதிலளிக்கவில்லை.

இந்த நிலையில், ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வங்கதேச இடைக்கால அரசு “இன்டர்போல்” உதவியை நாட முடிவு செய்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டவர்களுக்கான

# சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக வசூலிக்கப்படும் கட்டணங்களை திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, வெளிநாட்டு பிரஜைக்கு ஒரு மாத காலத்திற்கு தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு முன்பு 2,000 ரூபாவாக இருந்த கட்டணம் ரூ.15,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு மாதத்திற்கு மேல் மற்றும் இரண்டு மாதங்கள் வரை சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வசூலிக்கப்படும் கட்டணம் 21,000 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

இரண்டு மாதங்களுக்கு மேல் மற்றும் 6 மாதங்கள் வரை சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு வசூலிக்கப்படும் கட்டணம் 30,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6 மாதங்களுக்கும் மேலாகவும் 12 மாதங்கள் வரையிலும் ஒரு வெளிநாட்டு பிரஜைக்கு சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கான கட்டணம் 45, 000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக, வெளிநாட்டுப் பிரஜைக்கு சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான கட்டணம் 15,000 ரூபாவாகவும். மேலும், சாரதி அனுமதிப் பத்திரம் தொலைவடைந்தாலோ அல்லது சேதமடைந்தாலோ அதன் நகலை வழங்குவதற்கான கட்டணம் 15,000 ரூபாவாகும்.

மேலும், இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது அதற்கு சமமான உரிமத்தை வைத்திருக்கும் இலங்கைப் பிரஜைக்கு புதிய சாரதி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான கட்டணம் 3,300 ரூபாவில் இருந்து 30,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது அதற்கு சமமான உரிமத்தை வைத்திருக்கும் வெளிநாட்டினருக்கு, புதிய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான கட்டணம் 15,000 ரூபாவிலிருந்து 60,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1987 - இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
7இல்செவ்
கி-பா: 23 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L, Driver(own)
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16248

பிறப்பு: 1985 - இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி-பா: 39
12இல்செவ்
உயரம்: 6'
தகைமை/தொழில்: BA, DO
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்
தொ.இ: B/16249

பிறப்பு:1986 - இந்து
நட்சத்திரம்: பூரம்
கி-பா- 16
உயரம்:5'8"
தகைமை/தொழில்: A/L,Studio(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16250

பிறப்பு : 1991 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
1இல்செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:Degree &Work (Australia)
எதிர்பார்ப்பு - தகுதியான பெண்
தொ.இ: B/16252

பிறப்பு:1992 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 18
உயரம்:5'9"
தகைமை/தொழில்- A/L, Hardware (owner)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16254

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1999 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
12இல்செவ்
உயரம்: 6"
தகைமை/தொழில்: BFA, Work
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16276

பிறப்பு -1999 - இந்து
நட்சத்திரம்: மிருக்சீரிடம்
1இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - பட்டதாரி,Demo
எதிர்பார்ப்பு - பட்டதாரி
தொ.இ: G/16282

பிறப்பு - 1988 - இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா- 63
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA, Teacher
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16283

பிறப்பு -2001 - இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்- A/L, Nurse
எதிர்பார்ப்பு - தகுதியான ஆண்
தொ.இ: G/16284

பிறப்பு-2003 - இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
1இல்சூரிசெவ்
கி.பா- 18 1/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Degree, Canada
எதிர்பார்ப்பு - only Canada
தொ.இ: G/16285

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 488



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வாழ்வது சுலபம்!

இந்தப் பிரச்சினையிலேயிருந்து எப்படித்தான் தப்பிக்கப் போகின்றேனோ தெரியவில்லையே என்று நினைத்துக்கொண்டு பயந்து போகிறவர்கள் நிறைய பேர்! பல சந்தர்ப்பங்களிலே பிரச்சினை சின்னதாக இருக்கும். ஆனால் பயம்தான் அதிகமாக இருக்கும். எப்படி ஒரு பிரச்சினையை கையாளுவது என்று தெரிவதில்லை. அதனாலேதான் பயம் வருகிறது! நமக்குள்ளேயிருந்து பலத்தை நாம் இன்னமும் சரியாக புரிந்துகொள்வதில்லை அதுதான் சிக்கல்!

அவ்வளவு தூரத்திற்கு ஏன்?

நம்மளை நாமே கையாள்வது எப்படி என்பதை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பதுதான் உண்மை!

நெருக்கடியான சூழ்நிலைகளைக் கூட நிதானமாக அலட்டிக் கொள்ளாமல் சமாளிக்கின்றவர்கள் சிலபேர் உண்டு. அப்படி சிலபேரை சந்தித்து உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள்!

அவர்கள் சொன்னதையெல்லாம் தொகுத்துப் பார்த்தால் ஒரு ஏழு விடயங்கள் முக்கியமாக தெரிந்திருக்கும். முதல் விடயம் என்னவென்றால் மனதிலே இறுக்கம் (Tension) இருக்கக்கூடாது இதற்கு வழி நகைச்சுவை உணர்வுதான்! சில "ஜோக்" குகள் இருக்க வேண்டும் நேரம் பார்த்து அதுகளை எடுத்து விட வேண்டும்.

இரண்டாவது விடயம் அவசரம் கூடாது! (Take your time) நெருக்கடியான நேரத்திலே அவசரமாக செயற்பட வேண்டும் என தோன்றும். கொஞ்சம் தாமதப்படுத்துவதனாலே மனதுக்கு யோசிக்க நேரம் கிடைக்கும். அவசரத்திலே தவறான விடயங்கள் ஏதும் செய்துவிடாமல் இருப்பதற்கு இது ? (Don't Dominate)

உங்களாலே ஒரு வெற்றி கிடைத்துவிட்டால் உடனே என்னாலேதான் இது என்று டமாரம் அடிக்க ஆரம்பித்துவிட உங்களுக்குள்ளே சந்தோஷப்பட்டுக் கொள்ளுங்கள். அதுபோதும் ஒரு வேலை நடக்கும்போது தர்ம,சங்கடமான சூழ்நிலையை யாருக்கும் உண்டு செய்துவிடக்கூடாது!

அடுத்த விடயம். Consider Motive

நம்மளைப் பற்றிய விமர்சனம் அல்லது நமக்கு ஏற்பட்ட அவமானம். இது நம் மனதை ரொம்ப சங்கடப்படுத்தும்.

ஒரு பெரிய மனோத்தத்துவ நிபுணர் என்ன சொல்கிறார் தெரியுமா?

ஒருவர் நம்மளை பார்த்து ஒரு மாதிரியாக பேசிவிட்டால் அவர் அப்படிப் பேசியதற்கு என்ன காரணம் என்று கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள் என்கிறார்.

ஏனென்றால் பல சமயங்களிலே அதற்கு நாம் காரணமாக இருக்க மாட்டோம். யார்மேலேயோ உள்ள கோபத்தை வேறு வழியில்லாமல் நம் பெயரில் காட்டியிருப்பார்களாம்!

அடுத்த விடயம். Be Frank. எதிலும் வெளிப்படையாக இருக்க நினைப்பதை சொல்லுங்கள். மூடி மறைக்க வேண்டாம்!

அடுத்த விடயம் Be Prepared

இது சரியாக வரவில்லை என்றால் அடுத்தது என்ன செய்யலாம் என்பதை தெரிந்து வைத்திருக்க வேண்டும் அதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

*1963* மே மாதம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட விண்கலத்திலே ஒரு பிரச்சினை. தானாக இறங்கக்கூடிய கருவிகள் திடீர் என்று வேலை செய்யவில்லை.

உடனே அதிலே இருந்த விண்வெளி வீரர் கூப்பர் (Gordon Cooper) பயந்து போய் விடவில்லை.

அதை சரி கையாலேயே கருவிகளை இயக்கி செய்து விட்டார். ஏனென்றால் அதற்கு அவர் தயாராகவே இருந்தார். அதற்காக பயிற்சிகளை அவர் முன்கூட்டியே முறையாக செய்திருந்தார்.

அடுத்த விடயம் என்னவென்றால். Look a Head சில விடயங்களை முன்னாடியே எதிர் நோக்க வேண்டும். அமெரிக்காவிலே ஒரு நிறுவனத்துடைய தலைவர். கான் ஃபரன்ஸ் ஹாலிலே எப்போது நுழைந்தாலும் என்னென்ன பிரச்சினைகள் எல்லாம் வரும் என்று எதிர்மறையாகவே எதிர் பார்த்து விட்டு வருவாராம்.

அதனாலே கூட்டம் நடக்கும் போது அவருக்குக் கோபம் வருவதே இல்லையாம்! ரொம்பவும் நிதானமான நிர்வாகி என்று அவர் பேர் வாங்கினாராம். இது மாதிரி நுணுக்கங்களை நாமும் பழக்கப்படுத்திக் கொண்டால் வாழ்வது சுமையாகத் தெரியாது. சுலபமாக தெரியும்! நமக்கு மட்டும் இல்லை. நம்மைச் சுற்றியிருக்கின்றவர்களுக்கும் வாழ்க்கை சுலபமாகிவிடும்!

குடும்பத்திலே கூட "நிதானமான கணவன்" என்று சிலபேர். பேர் வாங்குவது உண்டு. ஒருவர். கல்யாணம் ஆகி ஐந்து வருடத்திற்கு பிறகு ஒருநாள் பொலிஸ் ஸ்டேஷனுக்கு வந்தார். "எங்களுக்கு கல்யாணமான நாளிலேயிருந்து தினமும் என் மனைவி ஏதாவது ஒரு பொருளை தூக்கி என்மேலே வீசி ஏறிந்து கொண்டே இருக்கிறாள் சார்!" என்று புகார் கொடுத்தார். "இதற்கு முன்னாடி இதை ஏன் இங்கே வந்து சொல்லவில்லை." என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"இன்றைக்குத்தான் இன்ஸ்பெக்டர் மனைவி எறிந்த பொருள் என் மேலே வந்து பட்டது!" என்றான் அந்த ஆள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத்துணை


இல்லறம் என்னும் அறம் ஆணும் பெண்ணும் இணைந்து செய்யும் அறமாகும். ஆண் இல்லறத்தைச் செய்வதற்கு அருந்துணையாக இருப்பவள் பெண்ணே. அவளை வள்ளுவர் வாழ்க்கைத்துணை எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். இல்லறம் சிறக்கப் பணிசெய்பவள் பெண்ணே. ஆணின் செயற்பாட்டிற்குத் துணையாக இருக்கும் ஆற்றல் பெண்ணுக்கு உண்டு. இல்வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும் பெண் "இல்லாள்" என அழைக்கப்பட்டாள்.

இத்தகைய வாழ்க்கைத் துணை நலமான பெண்ணுக்குரிய பண்புகளையும் வள்ளுவர் வரையறை செய்துள்ளார். இப் பெண் மனையறம் செய்யத்தக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாக இருக்க வேண்டும். மேலும் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தகப்படி வாழ்க்கை நடத்தக்கூடிய ஆற்றலுடையவளாகவும் இருக்க வேண்டும். அவளுடைய நல்லாற்றல்கள் வருமாறு: துறந்தாரைப் பேணல். விருந்து அயர்தல், வறியாருக்கு ஏற்றது செய்தல், என்பன. நற்செய்கைகள் வருமாறு: வாழ்க்கையை நடத்தத் தேவையான பொருட்களை அறிந்து அவற்றைத் தேடி வைத்தல், அட்டில் தொழில் வன்மை, ஒப்புரவு செய்தல் என்பனவாகும். இத்தகைய செயற்றிறன் கொண்ட பெண்ணிடம் மனைமாட்சி இருக்கும். ஆனால் இத் திறன்கள் இல்லாத பெண் வேறு எத்தகைய திறன்களைப் பெற்றிருந்தாலும் அவற்றால் எதுவித பயனுமில்லை. இன்னும் கற்பு என்னும் நலம் உடைய பெண்ணே பெருமையுடையவள். பெண்ணின் மேம்பட்ட குணங்களில் கற்புடைமையே மேலான குணமாகும். இத்தகைய மனத் திண்மையுடைய பெண் தெய்வத்தைத் தொழவேண்டிய தேவையற்றவள். தன் கணவன் மதிப்புக்குரியவளாக இருப்பவள். அத்தகையவள் சொல்லை இயற்கையும் கேட்கும். அவள் இயற்கையிடம் மழை பெய்ய வேண்டும் எனக் கட்டளையிட்டால் உறுதியாக மழை பொழியும்.

பெண்ணின் ஆற்றல்களால் அவள் என்றுமே மனச் சோர்வு அடைவதில்லை. கற்புடைய பெண் தன்னைத் தானே காத்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டவள். தன்னைக் கொண்டவனையும் பேணும் பண்புடையவள். இருவருக்கும் புகழ் நீங்காத வகையில் சொல் காப்பவள். இவற்றையெல்லாம் செய்தும் சோர்வு இல்லாதவளே பெண் ஆவாள். அதனால் பெண்ணுக்குச் சிறை காவல் தேவை இல்லை. அவள் தன்னுடைய உறுதி நிலையால் தன்னைத்தானே காக்கும் ஆற்றலுடையவள். இப்பெண் வானுலகத்தாரால் போற்றப்படுவாள் "இத்தகைய இல்லாளைப்பெற்ற ஆண் தன்னை இகழ்ந்துரைக்கும் பகைவர் முன்னே சிங்கம் போல நடந்து செல்வான்.

இப்பெண்ணின் இன்னொரு சிறப்பான ஆற்றலும் உண்டு. மங்கலம் எனச் சிறப்பாகப் பேசப்படுவது மனையினுடைய சிறப்பான நிலையாகும் . அதற்கு மேலும் நன் கலமாக அமைவது நல்ல மக்களைப் பெறுவதாகும். இல்லற வாழ்க்கை தொடர்வதற்கு மக்கட் பேறு இன்றியமையாதது. ஒரு பெண் கருவுற்று மகவைப் பெறுவது ஒரு பேராற்றலாக முன்னர் கருதப்பட்டது. குழந்தையை ஈன்று புறந்தருதல் என் கடன் எனப் பெண் செயற்படுகிறாள்.குழந்தை வளர்ப்பில் அவளுடைய தாய்மைப் பணியை அறிய முடிகிறது. வையகத்தில் பெண்ணின் தாய்மைநிலை ஓர் உயர்ந்த கொடையாக மதிக்கப்படுகிறது. வாழ்க்கைத் துணையாக வந்த பெண் தாயாக உயர்வு பெறுகிறாள். தமிழர் பண்பாடு தாயைத் தெய்வமாகப் போற்றுவதாகும்.பெண்ணின் இயற்கையான மென்மைப் பண்பு, அழகு, கவர்ச்சி என்பவை சிறப்பாகத் தமிழ் மொழி இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை உள்வாங்கியே வள்ளுவர் பெண்ணை "வாழ்க்கைத் துணை நலம்" எனச் சிறப்பித்துள்ளார். இன்றைய கால கட்டத்தில் பெண்ணின் ஆற்றல் பெரிதும் மதிக்கப்படுவதில்லை. ஓர் ஆண் அவளைத் திருமணம் செய்வதற்குப் பல்வேறு தடைகளையே ஏற்படுத்தியுள்ளான். தனது ஆற்றலும் உடல்வலுவும் பெண்ணிடம் இல்லை என்பதே ஆணின் முடிவாகவுள்ளது. அதனால் திருமணம் என்ற இணைப்பு வலுவற்றதாகி விட்டது. மேலைத்தேயப் பண்பாட்டின் செல்வாக்கால் ஆணும் பெண்ணும் தமிழர் பண்பாட்டு மரபுகளைப் புறந் தள்ளி வாழ முற்பட்டுள்ளனர். வாழ்க்கைத் துணையாக வரும் பெண் எல்லா வளங்களோடும் வர வேண்டும் என ஆண் எதிர்பார்க்கிறான். இன்னும் அவள் உடலுழைப்பை மதிக்கின்ற நிலையும் இல்லை. இதனால் மணமுறிவுகள் பெருகி விட்டன. இல்லறம் செய்ய வல்ல ஆணின் வாழ்க்கைத்துணையாக அவளோடு இணையும் பெண். அவளில் தங்கி வாழும் நிலையே ஏற்பட்டுள்ளது.

வெள்ளி நற்சிந்தனை 14



முனைவர் ச.மனோன்மணி

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 25.11.2025 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு விவசாய மருந்து தெளி கருவி, சவல், மண்வெட்டி, கோடாரி, காஸ் சிலிண்டர் மற்றும் burner என்பன ஏல விற்பனை செய்யப்படும் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## சமய தீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம் பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிவமார்க்கம் ஏற்று சமய தீட்சை பெற விருப்பம் உள்ளவர்கள் தங்கள் விபரங்களை முன் கூட்டியே தெரிவித்துக் கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (8)

# இராசிபலன்

21.11.2025,
கார்த்திகை 05 , வெள்ளிக்கிழமை
பிரதமை பிற்பகல் 2.18 மணிவரை

அனுசம் பிற்பகல் 2.09மணிவரை
சுபநேரம் 6.10- 7.40 மணிவரை
இராகுகாலம் 10.40-12.10 மணிவரை

சந்திராஷ்டமம்
அச்சுவினி, பரணி

வளவன்

**மேஷம்** – வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் தோன்றி மறையும்.

**ரிஷபம்** – குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கடன் தொல்லைகள் குறையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** – வியாபார விருத்தியுண்டு, வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், காலை நேரத்திலே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** – பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** – உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** – உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** – வங்கி சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ்கூடும், தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** – ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், முன்னேற்றம் கூடும் நாள், கௌரவமான நாள்.

**தனுசு** – அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பிரியமான ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**மகரம்** – திட்டமிட்ட காரியங்களில் திருப்பங்கள் ஏற்படலாம், பலரது அன்புக்கு பாத்திரமாவீர்கள், திடீர் பணவரவால் மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்** – வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்துடன் உதவ முன்வருவார்கள், திட்ட மிட்ட காரியங்கள் எளிதில் கைகூடும்

**மீனம்** – குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், நண்பர்களால் நன்மையுண்டு, தடைகள் விலகி தனவரவு பெருகும் நாள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள்.

உண்மையொன்றே அழியாத அணிகலன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 915





அந்த மண்டபத்தை நான் பார்த்திருந்தால், எனக்கும் அது தெரிந்திருக்கும்!" என்றாள்.

சக்கரவர்த்தி மந்தாகினியை உற்றுப் பார்த்துக் கொண்டே "ஆமாம் வழி தெரியாமல் தவித்துச் சிற்ப மண்டபத்தின் மலை மேல் முட்டிக் கொண்டிருக்கிறாள். எங்கே போவதற்காக வழி தேடினாளோ, தெரியவில்லல கடை சியில் இங்கே வந்து சேர்ந்தாள்!" என்றார்.

"தங்களிடம் வருவதற்குத் தான் வழி தேடி இருக்கிறார். அதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் இல்லை. நானே இவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். தங்களைத் தரிசிக்காமல் இவ்விடம் விட்டுப் போகமாட்டார் என்று"

"நான் நம்பவில்லை. முதன் மந்திரி! என்னிடம் இவள் வருவதாக இருந்தால் முன்னமே வந்திருக்கமாட்டாளா? இருபத்தைந்து வருடமாக வந்திருக்கமாட்டாளா? இத்தனை நாள் பொறுத்திருந்து வருவானேன்? என்னைப் பேயாக வந்து சுற்றுவானேன்? ஆம், ஆம்! இவள் பேய் வடிவத்தில் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தேன். அதுவும் உண்மைதானே? பேயைப் போலத் தான் ஈழ நாட்டுக் காடு மலைகளில் அலைந்து திரிந்து வந்திருக்கிறாள். நான் இத்தனை காலமும் அரண்மனைச் சுகபோகங்களில் ஆழ்ந்து காலம் கழித்திருக்கிறேன். குற்றத்தின் சக்தியைத்தான் என்னவென்று சொல்லுவது? இவளைப் போன்ற உருவத்தைக் கண்டு எத்தனை தடவை என் உள்ளம் பிரமை அடைந்திருக்கிறது யார் கண்டது? இப்போது வந்ததைப் போல இதற்கு முன்னாலும் இரகசியமாக வந்து என்னைப் பார்த்து விட்டுப் போனாளோ, என்னவோ? நான் பிசாசு என்று எண்ணி மிரண்டு வந்தேன்! இருபத்தைந்து ஆண்டு! இருபத்தைந்து யுகம்!"

இவ்விதம் தமக்குத் தாமே பேசுக்கிறவர் போலச் சொல்லி வந்த சக்கரவர்த்தி திடீரென்று அநிருத்தரின் பக்கம் திரும்பி, "முதன்மந்திரி! நீர் ஏதோ குற்றம் செய்ததாகச் சொல்லி மன்னிப்புக் கேட்டீரே? அது என்ன குற்றம்?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

அநிருத்தர், "சக்கரவர்த்தி! குற்றவாளியிடமே குற்றத்தைப் பற்றிக் கேட்பது தர்மமா?" என்றார்.

. "பின்னே, யாரிடம் கேட்கிறது? ஆம், ஒருவரிடமும் கேட்க வேண்டியதில்லை. உம்முடைய முகத்திலேயே எழுதியிருக்கிறது. அவள் கடலில் விழுந்து இறந்து விட்டதாக வந்து சொன்னீரே? அதுவே பொய்! இருபத்தைந்து வருஷங்களாக அந்தப் பொய்யை நீர் சாதித்து வந்தீர். நானும் நம்பி வந்தேன் அநிருத்தரே! உண்மையிலேயே உமது குற்றம் மிகப் பயங்கரமானது!"


"அதற்கு நான் மட்டும் பொறுப்பாளி அல்ல, சக்கரவர்த்தி! கரையர் குல மக்களும் பொறுப்பாளிதான்! அவர் கடலில் விழுந்தது என்னமோ உண்மை. பிறகு புனர் ஜன்மம் அடைந்தார். தங்களிடம் அவர் உயிரோடிருப்பதைச் சொல்ல வேண்டாமென்று வாக்குறுதி வாங்கிக் கொண்டார் வாக்குறுதியைக் கொடுக்காவிடில் மறுபடியும் உயிரை விட்டு விடுவேன் என்று சொன்னார்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## ஆபத்து வேளையில் உதவியவர் யார்?



ஒரு சிறிய நகரத்தில் அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பலருக்குக் கல்வி கற்றுக் கொடுத்து, அதனால் கிடைக்கும் பொருளில் வாழ்க்கை நடத்தினார். அவருக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் சோமன். இளையவன் காமன்.

மூத்தவன் சோமன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு இல்லாமல், அனைவரையும் சமமாகக் கருதி பழகுவது அவன் வழக்கம்.

இளையவன் கல்வியில் ஆர்வம் கொண்டிருந்தான். கல்வி போதித்து வந்தான் அந்தணரான தந்தை இறக்கவே, இருந்த சிறிது நிலத்தை அண்ணனும் தம்பியும் பகிர்ந்து கொண்டனர்.

மூத்தவனான சோமன் விவசாயத்தில் ஈடுபட்டு உழைக்கலானான். ஒரு நாள், சோமன் தாழ்த்தப்பட்ட இனத்து இளைஞர்களோடு உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

அதைக் கண்டு வெறுப்படைந்த அந்தணப் பெரியவர் ஒருவர், சோமனிடம் "நீ அந்தண குலத்தில் பிறந்தவன் அல்லவா? தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுடன் பழகலாமா?" என்று கண்டித்து அவனை ஏசினார்.

பெரியவரின் பேச்சு அவனுக்குக் கோபத்தைத் தூண்டியது, "கடவுளின் படைப்பில் உயர்வு தாழ்வு எப்படி இருக்க முடியும்? பிறப்பு என்பது எல்லோருக்கும் சமம். அதில் வேறுபாடு காண்பது முட்டாள்தனமானது. மேலும், அந்த தாழ்த்தப்பட்ட இனத்தவர், உழுது பயிர் செய்து தருவதைத்தானே அனைவரும் சாப்பிடுகிறோம். அதில் வேறுபாடு காண்கிறோமா? மக்களின் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது முட்டாள் தனமானது." என்று கூறினான். பெரியவர் பேசாமல் சென்று விட்டார்.

சில நாட்களுக்குப் பிறகு, அந்த அந்தணப் பெரியவர் சாலையில் சென்று கொண்டிருந்த போது, மயக்கமுற்றுக் கீழே விழுந்துவிட்டார்.

அதைப் பார்த்த தாழ்த்தப்பட்ட இனத்தவன் ஒருவன், ஓடிவந்து, அவர் முகத்தில் தண்ணீர் தெளித்து, சிறிது தண்ணிர் குடிக்கச் செய்து, அருகில் இருந்த, தன் குடிசைக்குத் தூக்கிச் சென்று மயக்கத்தை தெளியவைத்து உதவினான்.

பெரியவர் எழுந்து புறப்படும் போது எதிர்பாராமல் அங்கே வந்த சோமன், "அந்தணப் பெரியவர்! மயக்கமுற்று கீழே விழுந்த உங்களைக் காப்பாற்றி உயிர் பிழைக்கச் செய்தவன் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் என்பதை நினைத்துப் பாருங்கள் உங்கள் இனத்தவர் வரும்வரை காத்திருந்தால் நீங்கள் செத்துப் போயிருப்பீர்கள்" என்று இடித்துக் காட்டினான். பெரியர் தலைகவிழ்ந்து, எதுவும் பேசாமல் நடக்கலானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறிவும் சுய மரியதையும் பகுத்தறிவுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
~ பெரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இருபத்தொரு மாணவர்களுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படலாகாது!

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட நெல்லியடியில் அமைந்துள்ள ஒரு பாடசாலையில் உயிரியல் பாடத்தின் பகுதி ஒன்றின் விடைத்தாள் உரியவாறு அனுப்பப்படாமை குறித்த விவகாரம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை முடிவுற்றதும் மாணவர்களிடம் இருந்து விடைத்தாள்களைப் பெற்று அவற்றைச் சரிபார்த்த பின்னரே பரீட்சை மண்டபத்திலிருந்து மாணவர்கள் வெளியேற அனுமதிக்கப்படுவர்.

தவிர, விடைத்தாள்கள் உரியவாறு பொதி செய்யப்பட்டு உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு நியமிக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும்.

குறித்த விடைத்தாள்களைப் பெற்றுக் கொள்ளும்போதும் சரிபார்க்கின்ற பணி நடந்தாகும்.

இந்த நடைமுறைகள் மூலம் ஒரு பரீட்சை மண்டபத்திலிருந்து விடைத்தாள்கள் கிடைக்கவில்லை என்பதை உடனடியாகவே அறிய முடியும்.

இருந்தும் குறித்த விடைத்தாள்கள் உரியவாறு அனுப்பப்படவில்லை எனும்போது, எங்கள் கல்விப்புலம் குறித்த மனப் பதிவுகள் மிகவும் வேதனை தருவதாக உள்ளன.

எத்துணை நம்பிக்கைகள் – பரீட்சைக்கான தயார்படுத்தல்கள் – பதின்மூன்று ஆண்டு கால கல்விக்கான அர்ப்பணிப்பின் அறுவடைகள் என எல்லா அபிலாசைகளையும் ஒரு கணத்தில் அறுத்துக் கொட்டுவது போன்ற அந்த விவகாரம் எப்படி நடந்தது? எப்படி நடக்க முடியும்?

பரீட்சை நிறைவுற்றதும் அதிகாரிகள் அன்றைய விடைத்தாள் என எதை ஒப்படைத்தார்கள் என்ற கேள்விகள் இதயத்தைத் துளைக்கின்றன.

ஆம், அவ்வாறானதொரு சம்பவத்தால் நொருங்கிப்போன சமூக கருசனையாளர்களால் உண்மையில் உறங்க முடியவில்லை.

இங்குதான் அதிகாரிகள் குழு விட்ட தவறு அந்த இருபத்தொரு மாணவர்களையும் எந்த வகையிலும் பாதித்துவிடலாகாது.

எனவே பிரதமரும் கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமரசூரியவின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்கு உரிய நடவடிக்கை என்பது குறித்த பரீட்சை மண்டபத்தில் குறித்த உயிரியல் பாடத்துக்குத் தோற்றிய 21 மாணவர்களுக்கும் எந்தப் பாதிப்பும் தாக்கமும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வதுதான் இங்கு பிரதானமானது.

கூடவே பரீட்சைத் திணைக்களமும் மாணவர்களுக்குப் பாதகம் இல்லாமல் பார்த்துக் கொள்வது கட்டாயம்.

இல்லையேல் சம்பந்தப்பட்ட 21 மாணவர்களும் தமக்கு நீதி கேட்டு நீதிமன்றத்தை நாடுவதற்கும் தயாராக இருக்க வேண்டும்.

# ஈழத்தமிழருக்கு சமஷ்டியே தீர்வு அதற்கு இந்தியத்தலையீடு அவசியம்

## தமிழக முதல்வரிடம் திருமாவளவன் எடுத்துரைப்பு

இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும் நிலையில் அதில் ஈழத் தமிழர்களுக்கு சமஷ்டி நிர்வாக முறைமை கிட்ட இந்திய அரசு தலையிட வேண்டும் என்றும் அதற்குத் தமிழக அரசு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் தமிழக முதலமைச்சரிடம் தொல்.திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று தமிழ்நாடு முதலமைச்சரை சந்தித்த பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் என்னைச் சந்தித்தபோது,

இலங்கையின் புதிய அரசியலமைப்பு சட்டத்தில் ஈழத்தமிழர்களுக்கு தன்னாட்சி அதிகாரத்தை வழங்கும் வகையில் ஒரு கூட்டாட்சி நிர்வாக முறையை அரசமைப்பின் வழியாக கொண்டு வர வேண்டும் என்றும் அவ்வாறு கூட்டாட்சி சட்டத்தை அரசியலமைப்பில் இணைப்பதற்கு இந்திய அரசின் தலையீடு இன்றியமையாததாகவுள்ளது.

இந்திய அரசை தலையிட வைக்க தமிழ்நாடு அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

அதனடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சரை சந்தித்து தமிழ்நாடு அரசு இந்திய அரசுக்கு ஈழத்தமிழர் நலன்களுக்காக புதிய அரசியலமைப்பில் தமிழர்களின் இறையாண்மையை நிலைநாட்டும் வகையில் தன்னாட்சி அதிகாரத்தை வழங்க ஆவன செய்ய வேண்டும்.

இதனை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்கிற கோரிக்கை மனுவையும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தையும் வழங்கினோம்.

இது முக்கியமான கால கட்டத்தில் நாம் விடும் கோரிக்கை.

13 வது திருத்தம் மாகாண சபைகளுக்கு எந்த அதிகாரமும் இல்லாத திருத்தம். எனவே 13 வது திருத்தம் எங்களுக்கு உடன்பாடில்லை என ஈழத்தமிழர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

சமஷ்டி ஆட்சிமுறையைக் கொண்டு வர வேண்டும் என்பது தான் அவர்களது கோரிக்கை. இதனை முதலமைச்சரிடம் விரிவாக எடுத்துரைத்தோம் என்றார். (ம-7)

# யாழ்ப்பாணம் முதல் மன்னார் வரை பல சலூன்களை நடத்தும் இராணுவம்

## ஒன்றே ஒன்று என பூசி மழுப்பிய பிமல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்குட்பட்ட இடங்களில் இராணுவத்தினரால் வன்னிப் பகுதியில் ஒரேயொரு சிகை அலங்கரிப்பு நிலையம் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றது என அமைச்சர் பிமல் ரத்நாயக்கா பாராளுமன்றில் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் இதற்கு வடமாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் கடும் கண்டனத்தை வெளியிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் வடக்குமாகாணத்தில் இராணுவத்தால் நடத்தப்படும் பல சிகை அலங்கரிப்பு நிலையங்களை அச்சங்கம் பட்டியலிட்டுள்ளது.

அதில் யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை தொண்டைமானாறு வீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் சிகை அலங்கரிப்பு நிலையம் இராணுவத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

வவுனியாவில் பம்பைமடு இராணுவ முகாம், வவுனியா சிறைச்சாலைக்கு முன், இரட்டை பெரியகுளம் இராணுவ முகாம் மற்றும் பரிச்சங்குளம் இராணுவ முகாமிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் விசுவமடு புன்னை நீராவியடியிலுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களம் இணைந்த கட்டளைத் தலைமையகத்திலும்

முல்லைத்தீவில் முருகண்டி கால்நடை பயிற்சி கல்லூரியடி இராணுவ முகாம், முருகண்டி எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமையுள்ள இராணுவ முகாம், அக்கராயன் முருகண்டி விஷேட படையணி இராணுவ முகாம் மற்றும் கோப்பாபுலவு கொண்டமடு வீதி 59ம் படைப்பிரிவினுள் மூன்று சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நடத்தப்பட்டு வருவதுடன் மன்னார் மாவட்டத்தில் கள்ளியடி இலுப்பைக்கடவை மற்றும் திருக்கேதீச்சரம் முள்ளிப்பள்ளத்திலும் இராணுவத்தினரால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் இன்றுவரை நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துவதால் சிகை அலங்கரிப்பாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைவதாகவும் குறித்த நிலையங்களை மூடுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-7,250)

# யாழ்ப்பாணம் நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பகிரங்க ஏல விற்பனையானது நாளை (22) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில்,


யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், சவல், கோடரி மற்றும் இரும்புகள் என்பன விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலத்துக்கான நடைமுறைகளை நீதிமன்றப் பதிவாளர் வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் குறித்த பகிரங்க ஏலத்தில் குறித்த பொருட்களை கொள்வனவு செய்பவர்கள், கொடுப்பனவுகளை பணமாகவோ அல்லது வங்கி அட்டை மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

குறித்த பொருட்களை ஏலத்தில் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக் கொள்ளும் குறித்த பொருட்களை உடனடியாக அன்றைய தினமே வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-7)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 01 - 30, 2025



“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை”

ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

05

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எனினும் வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற நிலை நோக்கி உலகம் சென்று கொண்டிருக்கிறது.

### இலங்கையின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் (WPC)

இலங்கையின் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் (WPC) என்பது பல்வேறு அரசியல் கட்சிகள், புவியியல் அமைவிடங்கள், இன மற்றும் மதக் குழுக்களைச் சேர்ந்த பெண் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரே குறிக்கோளின் கீழ் - பெண்களை வலுவூட்டுவதுடன் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களை ஒழித்தல்- எனும் ஒன்று சேர்க்கும் ஒரு தனித்துவமான பாராளுமன்றப் பொறிமுறையாகும் என்பதுடன் இலங்கையில் பாலினச் சமத்துவத்தை அடைவதற்கான சட்டம் மற்றும் கொள்கை சார்ந்த விடயங்களுக்காகப் பரிந்துரைக்கும். அதே வேளை, பாலினம் தொடர்பாக மிக உயர்ந்த தீர்மானம் எடுக்கும் நிறுவனம் ஒன்றாக செயற்படுவதோடு பாராளுமன்றத்தினுள் அமையப் பெற்றிருக்கும் விசேட குழுவாகும்.

அரசியலில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிப்பது, பெண்களின் உரிமைகள் மற்றும் பாலினச் சமத்துவத்தைப் பாதுகாப்பது, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான உரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்களைத் தடுப்பது, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உள்ளடங்கலாக பெண் தொழிலாளர்களின் நலனோம்புகை மீது கவனம்செலுத்துதல், சலுகை கிட்டாத பெண்கள் மற்றும் விதவைகள் மத்தியில் வறுமை ஒழிப்பு மற்றும் அவர்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் வசதியளிப்பு ஆகியவற்றைப் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உபாயமார்க்கங்கள் உள்ளடக்குகின்றன.

பெண்கள் மத்தியில் கல்வியை மேம்படுத்துதல், பெண்களின் உடல்நலம் தொடர்பான பிரச்சனைகளை ஆராய்தல், அவர்களுக்குச் சட்ட உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல், பெண்களின் முன்னேற்றத்திற்கான சட்டங்களை இயற்றிப் பொதுவாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களித்தல் ஆகியவையும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உபாயமார்க்கங்களா கும்.

பாராளுமன்றத்தில் பரிந்து பேசுதல், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினர்களுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சிகள், மாநாடுகள் மற்றும் மாவட்ட மட்டங்களில் வெளிக்கள நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் அதன் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக ஒன்றியம் அரசியல் வேறுபாடுகள் எதுவுமின்றி மிகவும் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதுடன் நாட்டில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தவும் ஒன்றியத்தினால் இயலுமாகியுள்ளது. மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றப் பெண் உறுப்பினர்களுடனும் அரசாங்க அமைச்சுக்களுடனும் திணைக்களங்களுடனும் நிறுவனங்களுடனும் ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள், உள்ளூர் மற்றும் சர்வதேச சிவில் சமூக அமைப்புக்களுடனும் தனிப்பட்ட தொழில் வல்லுநர்களுடனும் ஒன்றியம் ஒரு வலையமைப்பையும் உருவாக்கியுள்ளது.

தற்போது (2025) பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள 22 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றியத்தின் உறுப்பினர்களாவர். (திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ், (திருமதி) சட்டத்தரணி சமிந்தி ராணி கிரிஎல்லே, (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ, (திருமதி) ஹேமாலி வீரசேகர, கலாநிதி ஹரினி அமரசூரிய, (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன, (திருமதி) சட்டத்தரணி [illegible], (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன, (திருமதி) ஒஷானி உமங்கா, (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி, (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி, (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி, (திருமதி) சட்டத்தரணி நிலூஷா லக்மாலி கமகே, (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, (திருமதி) சட்டத்தரணி அனுஸ்கா திலகரத்ன, (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே, (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே, (திருமதி) தீப்தி வாசலகே, (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ, (செல்வி) அம்பிகா சாமிவெல், (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர, (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத் என்போர். பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தலைவராக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் இருக்கின்றார். ஒன்றியத்தின் பிரதி இணைத் தலைவர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டத்தரணி சமிந்தி ராணி கிரிஎல்லே, சமன்மலீ குணசிங்ஹ இருக்கின்றனர்.

### ஒன்றியத்தின் குறிக்கோள்கள்

- அரசியலில் பெண்களின் பங்கேற்பினை அதிகரித்தல்
- பெண்களின் உரிமைகள் மற்றும் பால்நிலை ரீதியான சமத்துவத்தைப் பாதுகாத்தல்
- பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவிலுமான வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களைத் தடுத்தல்
- புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் உள்ளடங்கலாகப் பெண் தொழிலாளர்களின் நலநோம்புகையை மேம்படுத்துதல்
- சலுகைகள் குறைந்த பெண்கள் மற்றும் விதவைகள் மத்தியிலுள்ள வறுமையை நீக்கி அவர்களுக்கு வாழ்க்கைத்தொழில் பயிற்சி மற்றும் வளங்களை வழங்குதல்
- பெண்களுக்குக் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
- பெண்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- பெண்களுக்குச் சட்ட உதவி மற்றும் ஆலோசனை ஏற்பாடுகளை உறுதி செய்தல்.
- பெண்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்தச் சட்டவாக்கங்களை இயற்றுதல்.
- பொதுவாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

### இலங்கையில் பெண்கள் ஏன் அரசியலில் ஈடுபடத் தயங்குகிறார்கள்?

சர்வதேச ரீதியில் பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவ அடிப்படையிலான 2021 ஆம் ஆண்டுத் தரப்படுத்தலில் 190 நாடுகளில் இலங்கை 181 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய இலங்கை பாராளுமன்றத்தில் நூற்றுக்கு 9.7 சதவீத பெண் பிரதிநிதித்துவம் காணப்படுகிறது. அதாவது 5.3% இருந்து 9.7 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான சர்வதேச பட்டியலில் இலங்கை தற்போது 179 ஆவது இடத்தில் உள்ளது. பெண்களின் அரசியல் பங்களிப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மகளிர் ஸ்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, அமைச்சர்களாக பதவி வகிக்கும் பெண்கள் தொடர்பான பட்டியலில், இலங்கை 164 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கையை பொறுத்தவரை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதற்கான காரணிகள் பலவுள்ளன. இலங்கைப் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் தாக்கம் செலுத்தும் தடைகளை சமூக மற்றும் கலாசார, அரசியல், பொருளாதார, தனிப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாக அவற்றை வகைப்படுத்தி காட்டமுடியும்.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாந்தி...

மரணமடைந்துள்ளது.

இதில் இளவாலை உயரப்புலத்தைச் சேர்ந்த தர்ஷன் அஸ்வின் என்ற 9 மாத ஆண் குழந்தையே மரணமடைந்துள்ளது.

மேற்படி குழந்தை நேற்று வியாழக்கிழமை (20) அதிகாலை 12. 30 மணியளவில் வாந்தி எடுத்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் சங்கானைப் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது குழந்தை உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

மேற்படி ஆண் குழந்தையுடன் இரட்டைக் குழந்தையாகப் பிறந்த பெண் குழந்தை ஒன்று கடந்த நான்காம் மாதம் முதலாம் திகதி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60,104)

## படகில்...

வந்ததற்கான ஆதாரத்தை, ஜிபிஎஸ் கருவியின் உதவியுடன் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தியா சென்று கஞ்சாவுடன் யாழ். நோக்கி படகொன்று வருவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்ற போதிலும் மீட்கப்பட்ட படகில் போதைப் பொருட்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை.

கடலுக்குள் வைத்துப் போதைப் பொருட்கள் கைமாற்றப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

அத்துடன் மேற்படி நபர்களுக்கு உதவிய குற்றச்சாட்டிற்காக குருநகர் கடற்கரைப் பகுதியில் மோட்டார் சைக்கிளுடனும் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து இரண்டு மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட படகின் உரிமையாளர் ஏற்கெனவே 300 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுச் சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார் எனவும் குறித்த குற்றவாளியினுடைய மருமகனே இவ்வாறு இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்று வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலித செனவிரத்னவின் வழிகாட்டுதலின் கீழ் செயற்பட்ட யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி மஞ்சுள கருணாரத்ன மற்றும் களு பண்டார ஆகியோரின் தலைமையின் கீழான பொலிஸ் குழுவினரே இந்தக் கைது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## இரு பிள்ளை...

(வயது 75) நோயுற்ற நிலையில், கடந்த சில தினங்களாக கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார்.

அந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு உயிரிழந்துள்ளார்.

"தகப்பன் வந்தால் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு போயிடுவன் இவங்களும் விடுறாங்களில்ல என்னவாம் சொல்லுறாங்க..." என நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையிலும், தனது உறவினர்களிடம் கேட்டவாறு இருந்தார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனந்தசுதாகரனின் மனைவி உயிரிழந்த நிலையில், இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள சிறைச்சாலை வாகனத்தில் ஆனந்தசுதாகரன் அழைத்து வரப்பட்டு, மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லத் தயாரான போது அவரது மகளும் அப்பாவுடன் செல்லப் போகிறேன் எனக் கூறி சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய ஒளிப்படங்கள் ஊடகங்களில் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

அதனையடுத்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பில் ஆனந்தசுதாகரனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த நிலையில் இன்று 07 வருடங்கள் கடந்தும் மூன்றாவது ஜனாதிபதி பதவிக்கு வந்த நிலையிலும் ஆனந்தசுதாகரன் விடுதலையின்றி சிறையிலேயே உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## வலி.வடக்கு...

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வுகள் வலி. வடக்கு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

பிரதேச சபை அமர்வு ஆரம்பிக்க முன்னதாக மண்ணுக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்கு நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது.

சபா மண்டபம் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மாவீரர்களுக்கு நினைவுச் சுடரேற்றி நினைவேந்தப்பட்டது.

இதில் கட்சி பேதம் கடந்து அனைத்து உறுப்பினர்களும்நினைவஞ்சலி செலுத்தினர். (ம-7,33)

## கை...

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அண்மையில் நோர்வேயில் இருந்து நாடு திரும்பியிருந்த அதே பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை ராஜ்வதனன் (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60,104)

## போதை...

தங்காலையில் நேற்று "முழு நாடுமே ஒன்றாக" என்ற தேசிய போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டத்தை ஆரம்பித்து [illegible] போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் மிகவும் சவாலான இந்த வேலையைத் தொடருமாறு பாதுகாப்புப் படைகளுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் முழு ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும் என்று உறுதியளித்தார்.

நாட்டின் போதைப்பொருள் நெருக்கடியை எதிர்த்துப் போராடுவதை நோக்கமாகக் கொண்ட இந்த "முழு நாடுமே ஒன்றாக" தேசிய முன்முயற்சி, ஜனாதிபதியின் அனுசரணையில் தங்காலை பொது மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

9 மாகாணங்களிலும் முன்னெடுக்கப்படும் இத்திட்டம், தீங்கு விளைவிக்கும் போதைப்பொருள் பரவல் மற்றும் கடத்தலை ஒழிப்பதில் கவனம் செலுத்துகிறது.

இதில் குறிப்பாக நாட்டின் இளைஞர்களைப் பாதுகாப்பதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2025.11.20 — சீட்டிழுப்பு இலக்கம் 6019 — O 0 9 6 6 4 8
அத சம்பத — O 6 6 4 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0594

சுப தவசக் — திகதி 2025.11.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0135 — விருச்சிகம் 14 20 28 — 9389

தன நிதானய — திகதி - 2025.11.20 — சீட்டிழுப்பு இலக்கம் - 2049 — D 33 35 54 80 D

மெகா பவர் — திகதி 20/11/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2367 — O 24 11 36 50 71

ஜய — திகதி 2025.11.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0287 — Y 2 7 7 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4261 — சீட்டிழுப்பு திகதி 20.11.2025 — T 13 25 29 51 — T

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.11.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1328 — கும்பம் 34 47 48 50 கும்பம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 20.11.2025 — வெற்றி வாரம் 0727 — J 5 5 1 3 5 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,074,516.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2993 — சீட்டிழுப்பு திகதி 2025.11.20 — தினம் வியாழக்கிழமை — 14 26 51 66 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,552,599.20

சனிதா — திகதி 20.11.2025 — வெற்றி வாரம் 5154 — 09 11 76 80 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,526,276.80

சசிரி — வெற்றி வாரம் 823 — சீட்டிழுப்பு திகதி 20.11.2025 — வியாழக்கிழமை — 04 35 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4705 — சீட்டிழுப்பு திகதி 20.11.2025 — தினம் வியாழக்கிழமை — 04 11 41 62 சிம்மம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,530,697.20

கப்ருக — 2169 — 20.11.2025 வியாழக்கிழமை — N 20 14 27 33 48 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.608,589,373.80

அட கோடிபதி — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2819 — சீட்டிழுப்பு திகதி 2025.11.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,627,983.20 — 20 30 43 58 I


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி முகப்புடன்கூடிய சுற்று மதில் கட்டிய 14 பரப்பு காணி தேவையான அளவுகளில் பிரித்துக் கொடுக்கப்படும்.

நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யாழ்.சிற்றிபாம் (பூங்கன்றுக்கடை)**
**755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம்.**

(5954)

## மாப்பிள்ளை தேவை

01. இருபாலை, இந்து, 1997, ரோகிணி, IT degree ayurvedic doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55043)
02. சுன்னாகம், இந்து, 1988, பரணி, MSc(UK), UK citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54543)
03. கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Bio Chemistry, Germany citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54321)
04. சாவகச்சேரி, இந்து, 1994, அஸ்தம், BDS (University of Jaffna), Dental doctor மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.(54201)
05. இருபாலை, இந்து, 1998, உத்தராடம், HNDA in Accounting மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (49646)
06. அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Accountant, Australia citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (43129)
07. அச்சுவேலி, இந்து, 1992, ரோகிணி, BSc(Hons) in biological science மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (41136)
08. கந்தரோடை, இந்து, 2000, திருவாதிரை, Software Engineering மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (35870)
09. இளவாலை, இந்து, 1987, திருவாதிரை, Dentist doctor, canada citizen மணப்பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (32087)
10. சுன்னாகம், இந்து, 1995, திருவாதிரை, BSc(Hons) Micro biology, translational data scientist மணப் பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (30662)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(5973)

**S.Sharma J.P**
**www.thaalee.com**
**077 539 3728**

## சுபமாங்கல்யம் திருமண சேவை

Suba Mangalyam

உங்களது எதிர்பார்ப்புகளுக்கேற்ப பொருத்தமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை எம் திருமண சேவையினூடாக பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு

071 932 7425
Palaly Road, Thirunelveli.
www.subamangalyam.com

(5979)

## வேலைவாய்ப்பு

♦ **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு**
அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள்
(பெண்கள் – பகல் கடமை
ஆண்கள் – இரவுக் கடமை)

♦ **உதவி ஆசிரியர்கள்**
(இரு பாலாரும்)
தகைமை : க.பொ.த உயர்தரம்

யாழ். நகருக்கு அண்மித்து இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு :
**076 097 3121, 021 222 3378**

வலம்புரி நாளிதழ்,
இல.191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்

## இலஞ்சம்...

உத்தியோகத்தர் ஒருவர் இலஞ்சம் பெற முற்பட்ட போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், குறித்த பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர், ஒரு முறைப்பாடு தொடர்பாக நபர் ஒருவரிடம் இலஞ்சம் கோருவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்சப் பணத்தின் ஒரு பகுதியை பெறமுற்பட்ட போது அவரைக் கைது செய்துள்ளனர்.

(ம-7)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3580/- |
| 11-16 Kg | 2610/- |
| 21-22 Kg | 2380/- |

✔ குறைந்த விலை -நிறைந்த சேவை
✔ கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
✔ 14 நாட்களில் Delivery

(C-4380)

○ UK 11Kg - 1420/- ○ France 11Kg - 2170/- ○ Germany 11Kg - 2020/-
○ Swiss 11Kg - 2510/- ○ Australia 11Kg - 2150/- ○ Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village hotel & Indian Restaurant இற்கு சமையல் அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
**076 830 3931**

(C-4376)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 06 - 1954 | 17 - 11 - 2025 |



### திருமதி இராசகுலநாயகி சிவபாலசிங்கம் [இராசம்]

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசகுலநாயகி சிவபாலசிங்கம் அவர்கள் கடந்த 17.11.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் - இராஜேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான கிட்னர் -தங்கமுத்து தம்பதியினரின் மருமகளும் இளைப்பாறிய மாகாணப் பணிப்பாளர் Dr.சிவபாலசிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் தெய்வகுலநாயகி (கனடா), சுகுமார்(இலண்டன்), வசந்தராணி(இலண்டன்), மஞ்சுளா (அச்சுவேலி), உதயகுமார்(இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.அபிரா(அவுஸ்திரேலியா), துவாரகன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலேஸ்வரன்(அவுஸ்திரேலியா), உமாசுதா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமியாரும் மிஷிக்கா, யஸ்வின், ஆதவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் 23.11.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முழக்கன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
Dr.C.K.சிவபாலசிங்கம் குடும்பத்தினர்
077 861 8834
சி.துவாரகன் [illegible]

பயித்தோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(5958)

## வேலைவாய்ப்பு Voyzant (PVT) Ltd

கனடாவை தலைமையகமாகக் கொண்ட எமது நிறுவனத்தின் யாழ். கிளையிற்கு (Travel Agent) பயிலுனர் அல்லது முன்அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. உங்களின் சுயவிபரக்கோவையை 05.12.2025 இற்கு முன் எமது முகவரிக்கு, மின் அஞ்சலுக்கு அல்லது whatsapp க்கு அனுப்பி வைக்கவும்.

(C-4379)

No. 617& 619,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**077 284 9535 / 077 026 9999**
Email - suresh.kumar@voyzant.com

## தச்சு வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு சொந்தமான தச்சுவேலைத் தொழிலகத்தை பொறுப்பு எடுத்து நடாத்தக் கூடிய (நிலை, யன்னல், கதவு, மரபடி, கூரை வேலைகள், சீலிங் வேலைகள்) அனைத்தும் நன்கு தெரிந்தவர்கள் இருவர் அவசரமாகத் தேவை.

**வேலையிடம் : தொல்புரம், சம்பளம் : 4000 - 5000**
**நிரந்தர வேலையாக வழங்கப்படும்.**

**தொடர்பு : 077 213 7266/ 071 110 0066**

(5977)

ஓம் விராட் விஸ்வப்ப்ரம்மனே நமஹ

## யாழ். மாவட்ட விஸ்வகர்ம நகைத்தொழிலாளர் சங்கம்
## மாணவர் கௌரவிப்பு

விஸ்வகுல நகைத்தொழிலாளர் சமூக மாணவர்களில் 2025 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதி 120 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொண்ட மாணவர்களும், 2023 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை (A/L) எழுதி பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி செயலாளரிடம் தங்களின் சித்தி அடைந்ததை உறுதிப்படுத்தும் சான்றிதழ் பிரதி (Copy) மற்றும் Whatsapp இலக்கம் என்பவற்றைக் கொடுத்துதவவும்.

Whatsapp : **077 222 8482**
**213/1, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**077 236 7494**
**ஜெ.மனோகர்**
**செயலாளர்**

(5976)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org